இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 24 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 16 – சனிக்கிழமை 02 செப்டம்பர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 24: Thiruvalluvar Year - 2054 - Aavani 16 - Saturday 02 September 2023 - Madurai 12 Pages ₹5.00




மும்பையில் நேற்று (1.9.2023) நடைபெற்ற INDIA கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் – திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி, ஐக்கிய ஜனதா தள கட்சித் தலைவரும், பீகார் மாநில முதலமைச்சருமான நிதிஷ் குமார், தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் தில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா, துணைத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான உமர் அப்துல்லா, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவரும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சருமான ஹேமந்த் சோரன், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், சிவ சேனா கட்சித் தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் திருமதி மெகபூபா முப்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# எதேச்சாதிகார ஆட்சி முடிந்து; மக்களாட்சி மலர வேண்டும்!

## மும்பையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**மும்பை, செப்.2-**

**மும்பையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணி கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “எதேச்சாதிகார ஆட்சி முடிந்து; மக்களாட்சி மலர வேண்டும்” என வலியுறுத்தினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், மும்பை நகரில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு:-

பாட்னா, பெங்களூரு ஆகிய இரண்டு இடங்களைத் தொடர்ந்து, மூன்றாவது கூட்டமாக மும்பையில் இந்தக் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றி!

### பா.ஜ.க.வுக்கு காய்ச்சல்!

இந்தியாவைக் காக்கப் போகும் இந்த இந்தியா கூட்டணியானது கடந்த மூன்று மாதங்களாக மிகுந்த ஒற்றுமையுடனும் கட்டுக்கோப்புடனும் செயல்பட்டு வருகிறது. நமது கூட்டணியின் பலத்தைவிட, ‘இந்தியா’ என்ற பெயரே பாரதீய ஜனதா கட்சிக்குப் பயத்தையும் காய்ச்சலையும் உண்டாக்கி விட்டது. அதனால்தான், நம் கூட்டணியைக் கொச்சைப்படுத்திப் பேசுவதையே பா.ஜ.க.வினர் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் ஒன்று சேரமாட்டார்கள்; ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என பா.ஜ.க. நினைத்தது. ஆனால், கூட்டணியாக இணைந்து – அதற்குப் பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி விட்டோம் என்பது நம்முடைய உறுதியைக் காட்டுகிறது. வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது.

பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தி மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகளின் அரசை ஒன்றியத்தில் அமைப்பதே நமது அணியின் முழுமுதல் நோக்கமாகும். பா.ஜ.க.வைத் தனிமைப்படுத்தும் வகையில் – பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகளை முடிந்தவரை இந்த அணியில் சேர்த்தாகவேண்டும். இதனைமனதில்வைத்து அனைத்துத் தலைவர்களும் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### நாட்டைச் சீரழித்த பா.ஜ.க.!

நமது கூட்டணி, இந்தியா முழுமைக்குமான கூட்டணி என்பதால் இதற்கு ஒருங்கிணைப்புக் குழுவையும் குறைந்தபட்ச செயல் திட்டத்தையும் உடனடியாக உருவாக்க வேண்டும். இந்தியா கூட்டணியின் முகமாக அந்த அறிக்கைதான் அமையும். நமது நாட்டை பா.ஜ.க ஆட்சி பல்வேறு வகைகளில் சீரழித்துள்ளது. அதனை எப்படிச் சரிசெய்யப் போகிறோம் என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்வதற்கான அறிக்கையாக அது அமைய வேண்டும்.

ஒரு கட்சி ஆட்சி முடிந்து இன்னொரு கட்சியின் ஆட்சி என்பதாக இல்லாமல், எதேச்சாதிகார ஆட்சி முடிந்து, மக்களாட்சி மலரத் தேவையான கொள்கையின் மூலமாக மக்களிடையே நாம் நம்மை அடையாளப்படுத்த வேண்டும். நம்முடைய கூட்டணிக்கு இத்தகைய கொள்கைகள் தலைமை தாங்க வேண்டும்.

இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கூட்டணி வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவும் அடுத்த ஆண்டு இந்தியாவுக்கான ஒளிமயமான ஆண்டாக அமையவும் இப்போதே எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (4)!

### செப்டம்பர் 3 – அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதி யன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, செப்டம்பர் 3 ஞாயிறு அன்று முரசொலி சிறப்பிதழ், “பத்திரிகையாளர்தம் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**

---

ஆதித்யா எல்1 செயற்கைக்கோள்:

## கவுண்ட் டவுன் தொடங்கியது!

*ஸ்ரீஹரிகோட்டா, செப். 2-*

*சூரியனை ஆய்வு செய்ய 424 கோடி ரூபாய் செலவில் ஆதித்யா எல்1 செயற்கைக் கோள் பி.எஸ்.எல்.வி. எக்ஸ் எல் சி57 ராக்கெட் மூலம், இன்று காலை 11.50 மணிக்கு ஸ்ரீஹரிக்கோட்டாவில் இருந்து அனுப்பப்படவுள்ளது. பூமியில் இருந்து 15 லட்சம் கிலோமீட்டர் தூரத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே Lagrange point 1 எனும் புள்ளியைச் சுற்றியுள்ள வட்டப்பாதையில் சுற்றிவந்து ஆய்வு மேற்கொள்ளும்.*

*இந்நிலையில், ஆதித்யா எல்1 செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதற்கான 24 மணிநேர கவுண்ட் டவுன், காலை 11.50க்கு தொடங்கியதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

---

**ரூ.7.5 இலட்சம் கோடி ஊழலை திசை திருப்ப,**
**சமையல் எரிவாயு சிலிண்டர் 200 ரூபாய் குறைப்பு!**





இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 02-09-2023

# பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் சி.ஏ.ஜி.- 3

★ **ஆயுஷ்மான் திட்டம்:**

"ஆயுஷ்மான் பாரத்" திட்டத்தில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளது. எப்படி என்றால், ஒரே போலி எண்ணில் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளார்கள். இறந்துபோன 88 ஆயிரம் பேரின் வங்கிக்க ணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதுதான் ஆயுஷ்மான் ஊழல் ஆகும்.

கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக 2018-ஆம் ஆண்டு 'ஆயுஷ்மான் பாரத்' என்ற மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இந்தத் திட்டத்தின்கீழ், ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தில் மொத்தம் 7 கோடியே 87 லட்சம் பேர் பயன்பெற்று வருகின்றனர் என்று ஒன்றிய அரசு கூறியது. ஆனால் திட்டம் எப்படி நடந்துள்ளது தெரியுமா?

'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளில் 88 ஆயிரத்து 760 பேர் இறந்துவிட்டனர். ஆனால், அவர்கள் இறந்த பின்னரும், சிகிச்சை அளிக்கப்படுவதாகக் கூறி 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆளும் மத்தியப்பிரதேசத்தில் 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தின் கீழ், சிகிச்சை பெற்ற பின் இறந்ததாக அறிவிக்கப்பட்ட 403 நோயாளிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதே காலகட்டத்தில், மத்தியப்பிரதேசத்தில் உள்ள பல மருத்துவமனைகளில் 8 ஆயிரம் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டதாக கணக்கில் கூறப்பட்டுள்ளது. மேலும், தகுதியில்லாத குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாகப் பதிவு செய்யப்பட்டு, சுமார் 22 கோடியே 44 லட்சம் ரூபாய் வரை பயன்பெற்றுள்ளார்கள்.

ஒரே நேரத்தில் ஒரு நோயாளி பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கணக்கு காட்டி காப்பீட்டுத் தொகை பெறப்பட்டு மிகப்பெரிய முறைகேடு நடந்திருப்பதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தி இருக்கிறது.

**ஏழு ஆதாருடன் 4 ஆயிரத்து 761 பதிவுகள் இணைக்கப் பட்டுள்ளன. 9 லட்சத்து 85 ஆயிரம் பேர் தங்களது தொலைபேசி எண் 3 என பதிவு செய்துள்ளனர். 7 லட்சத்து 49 ஆயிரத்து 820 பயனாளிகள் 9999999999 என்ற ஒரே தொடர்பு எண்ணை அளித்துள்ளனர். இந்த ஏழரை லட்சம் பயனாளிகள் கொடுத்த ஒரே தொடர்பு எண்ணும் போலியானது. மேலும் 8888888888 என்ற ஒரே தொடர்பு எண் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 300 பயனாளிகள் கொடுத்துள்ளனர். 900000000 என்ற ஒரே எண்ணை 96 ஆயிரத்து 46 பேர் தொடர்பு எண்ணாக அளித்து மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 9 லட்சம் பேர் தொடர்பு எண் எதுவும் கொடுக்காமலும் ஒன்றிய அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இப்படி, ஊழலை வாழவைத்துள்ளது 'ஆயுஷ்மான்' திட்டம்!**

★ **பாரத்மாலா திட்டம்:**

நாடு முழுவதும் உள்ள சாலைகள் - நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளை இணைக்கும் வகையில் 'பாரத்மாலா' திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த 2015ஆம் ஆண்டு கொண்டுவந்தது. "பாரத்மாலா" திட்டத்தின்படி 34,800 கிலோ மீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலை அமைக்க 5 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாயை பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. ஆனால், 26 ஆயிரத்து 316 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலை அமைக்க 8 லட்சத்து 46 ஆயிரத்து 588 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அதாவது, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 'ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு 15 கோடியே 37 லட்சம் ரூபாய்' என்ற செலவை விட இரண்டு மடங்கு அதிகமாக, ஒரு கிலோ மீட்டருக்கு 32 கோடியே 17 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.**

பல செலவுகள் அதிகமாக இருந்தாலும், 2023 மார்ச் 31 வரை 13 ஆயிரத்து 499 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. இது பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அங்கீகரித்த நீளத்தில் 39 சதவிகிதத்துக்கும் குறைவாகவே உள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

'பாரத்மாலா' திட்டத்துக்கான டெண்டர் முறைகேடுகளையும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக, ஏலதாரர்கள் டெண்டர் நிபந்தனையைப் பூர்த்தி செய்யாதது, தவறான ஆவணங்களின் அடிப்படையில் ஏலதாரர்கள் தேர்வு செய்யப்பட்டது, அங்கீகரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகள் அல்லது தவறான டி.பி.ஆர்.கள் இல்லாமல் வழங்கப்பட்ட பணிகள் மற்றும் 3 ஆயிரத்து 598 கோடியே 52 லட்சம் ரூபாய் அளவுக்கு நிதியை திருப்பிவிட்டது போன்றவற்றையும் சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

**இதேபோல், "துவாரகா விரைவு நெடுஞ்சாலை" திட்டத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி ரூபாயாக இருந்த செலவு, 250 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.**

**பாரத்மாலா பரியோஜனா - 1 திட்டத்தின் கீழ் டெல்லியில் உள்ள துவாரகா முதல் ஹரியானா மாநிலம் குர்கான் வரை 29.06 கிலோமீட்டர் நீளத்திற்கான உயர்மட்ட எட்டு வழி துவாரகா விரைவு நெடுஞ்சாலை அமைக்கும் பணியை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கடந்த 2019-ஆம் ஆண்டு தொடங்கியது. "துவாரகா விரைவு நெடுஞ்சாலை" அமைப்பதற்கு தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்துத் திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கான பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது.**

**ஹரியானாவில் 18.9 கிலோ மீட்டர் தூரத்திற்கும் டெல்லியில் 10.1 கிலோ மீட்டர் தூரத்துக்குமான இத்திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் நீள சாலை அமைக்க 18 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளித்த நிலையில், அதற்கு மாறாக ஒரு கிலோ மீட்டருக்கு 250 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவானதாக சி.ஏ.ஜி. விசாரணையில் அம்பலமாகியுள்ளது. முதலில் இத்திட்டத்தின் செலவு 528 கோடியே 80 லட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் பின்னர் 7 ஆயிரத்து 287 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டியுள்ளது.**

அதாவது திட்டமிட்ட மதிப்பைவிட ஆயிரத்து 278 மடங்கு கூடுதல் தொகை செலவிடப்பட்டுள்ளது. இதுதவிர, விரிவான திட்ட அறிக்கை இல்லாமலேயே இந்த விரைவுச் சாலைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதையும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

ஏழு திட்டங்களில் நடந்த ஊழல்கள் மட்டும்தான் இவை. எல்லாத் திட்டங்கள் குறித்த அறிக்கையும் வந்தால் பா.ஜ.க.வின் ஊழல் முகம் முழுமையாகக் கிழிந்து தொங்கிவிடும்.

●●




மும்பையில் நேற்று (1.9.2023) நடைபெற்ற INDIA கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் – திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி, ஐக்கிய ஜனதா தள கட்சித் தலைவரும், பீகார் மாநில முதலமைச்சருமான நிதிஷ் குமார், தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் தில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா, துணைத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான உமர் அப்துல்லா, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவரும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சருமான ஹேமந்த் சோரன், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், சிவ சேனா கட்சித் தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் திருமதி மெகபூபா முப்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே. எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## மும்பையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்திக்க விரும்பிய பள்ளிச் சிறுமி!

மும்பை, செப். 2 -

மும்பை சென்றிருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மும்பையைச் சேர்ந்த வேணுகோபால் அய்யங்கார் என்பவர் ட்விட்டர் மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

அதில், 'மும்பைக்கு வருகை தந்துள்ள உங்களை வரவேற்கிறேன். என்னுடைய புதல்வி உங்களைச் சந்திக்க விரும்புகிறாள். எனவே தயவு கூர்ந்து தாங்கள், நீங்கள் தங்கி இருக்கும் கிராண்ட் ஹையாட் ஓட்டலில் சந்திக்க நேரம் ஒதுக்கித் தாருங்கள்' என்று கேட்டிருந்தார்.

இது தொடர்பாக அவரது மகள் ட்விட்டரில் குரல் வடிவில் பதிவிட்டது வருமாறு:-




**"நான் உங்களை பெரிதும் விரும்புகின்ற காரணத்தால் உங்களைச் சந்திப்பதில் ஆர்வமாக உள்ளேன். இந்தத் தருணத்தில் நீங்கள் மும்பை வருவதால் அதுவும் எனக்கு நல்வாய்ப்பாக அமைந்து விட்டது. என் குடும்பத்துடன் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன். என்னுடைய பெற்றோரும் தாத்தாவும் கொள்ளுத் தாத்தாவும் உங்களை பெரிதும் விரும்புவார்கள்.**

**உங்களைச் சந்திக்க எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம்"**

இவ்வாறு அந்த பள்ளி செல்லும் சிறுமி முதலமைச்சருக்கு குரல் பதிவு மூலம் தகவல் அனுப்பி இருந்தார்.

இதையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாம் தங்கியிருந்த இடத்திற்கு அவர்களை வரவழைத்து சந்தித்துப் பேசி, அச்சிறுமியையும் அவரது குடும்பத்தினரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - நாளை நடைபெறுகிறது!

# வடசென்னை ந.மனோகரன் புதல்வர் - மாணவரணி ந.ம.மகேஷ்குமார் திருமணம்!

### பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு! அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை!

சென்னை, செப்.2-

சென்னை-ஆர்.கே. நகர் பகுதி - கழக மூத்த முன்னோடி (நினைவில் வாழும்) மெட்டல் பாக்ஸ் மு. நடராசன் - ந.நாகம்மாள் ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - சென்னை வடக்கு மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் - தமிழ்நாடு டிரெய்லர் லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் வடசென்னை ந. மனோகரன் - திருமதி இந்திராமனோகரன் ஆகியோரின் புதல்வரும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான ந.ம.மகேஷ் குமாருக்கும் - சென்னை - பொன்னியம்மன் மேடு - சு.கஜபதி-க. தாட்சாயணி ஆகியோரின் மகள் க. ரம்யாவுக்கும் திருமணம் நாளைய தினம் (3.9.2023 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை - திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் - டோல்கேட் அருகில் அமைந்துள்ள தங்கம் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

திருமணத்திற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச்



செயலாளர் ஆர்.எஸ். பாரதி அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வாழ்த்திப் பேசுகின்றனர்.

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மேயர் பிரியா ராஜன் மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு எம்.சி., த.வேலு எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., துணை மேயர்.மு. மகேஷ்குமார்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கப்பாண்டியன், இரா. கிரிராஜன், மு.சண்முகம், பி.வில்சன், என்.ஆர்.இளங்கோ, டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு,

சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி. சங்கர், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.கே. மோகன், டாக்டர் நா. எழிலன், எஸ்.ஆர்.ராஜா, எஸ். அரவிந்த் ரமேஷ், இ. பரந்தாமன், அ. வெற்றியழகன்

தலைமைக் கழக நிர்வாகிகள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, அறிவாலயம் பத்மநாபன், என். ஜெயக்குமார், கு.க. செல்வம், ப.ரங்கநாதன், குமரி விஜயகுமார், முரசொலி கே.சேது, பி.குமரேசன், எஸ். ஜோயல், ஜி.பி. ராஜா, டாக்டர் இரா. மாசிலாமணி, விஜயா தாயன்பன், க. சோமு, வேளச்சேரி, பி. மணிமாறன், நாமக்கல் இரா.நக்கீரன், ஈரோடு இறைவன், பூவை சி. ஜெரால்டு, கவி.கணேசன், எஸ்.மோகன் தமிழ், க.அமுதரசன், சி.பிரதீப், கும்மிடிப்பூண்டி எம்.எல். ரவி

மாநில நிர்வாகிகள் இரா. மதிவாணன், பி.டி.பாண்டிச்செல்வம், இரா.கருணாநிதி, ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா. நரேந்திரன், சிம்லா முத்துச்சோழன் உள்பட பலரும் இம்மணவிழாவில் கலந்து கொள்கிறார்கள்.

முன்னதாக -இன்று (2.9.2023-சனிக்கிழமை) மாலை மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

## துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலி!

இம்பால், செப். 2-

மணிப்பூரில் சுராசந்த்பூர் மற்றும் பிஷ்ணுப்பூர் மாவட்ட எல்லையில் இரு தரப்புக்கு இடையே வெடித்த வன்முறைச் சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வரும் மணிப்பூரில் பழங்குடியின அந்தஸ்து தொடர்பாக மெய்தி மற்றும் குக்கி சமூகத்தினருக்கு இடையே கடந்த 4 மாதங்களாக வன்முறை நீடித்து வருகிறது. இதில் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், குக்கி சமூகத்தினர் ஆதிக்கம் செலுத்தும் சுராசந்த்பூர் மாவட்டத்திற்கும், மெய்தி ஆதிக்கம் செலுத்தும் பிஷ்ணுப்பூர் மாவட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் 3 நாட்களாக துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடைபெற்று வந்தன. இதில் உள்ளூர் பாடல் ஆசிரியர் எல்.எஸ்.மங்போய், குக்கி சமூகத்தைச் சேர்ந்த இருவர் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து சுராசந்த்பூரில் அத்தியாவசிய சேவைகளை உடனடியாக நிறுத்தி காலவரையற்ற கடையடைப்பு போராட்டத்திற்கு பழங்குடி கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.



திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் புதிதாக கழிவறைகள் கட்டுவதற்கான இடத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (31.08.2023) நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. கி.கார்த்தியேன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பங்குச் சந்தையில் அதானி குழுமம் வரலாறு காணாத ஊழல்!

## அமெரிக்காவின் ஊழலுக்கு எதிரான அமைப்பு குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப்.2 -

தனது சொந்த பங்குகளை தானே ரகசியமாக வாங்கி பங்குச் சந்தையில் அதானி வரலாறு காணாத முறைகேடு செய்ததாக அமெரிக்காவைச் சேர்ந்த வர்த்தக ஆராய்ச்சி நிறுவனமான ஓ.சி.சி. ஆர்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த ஓ.சி.சி.ஆர்.பி. அமைப்பு அதானி குழுமம் செய்த பல்வேறு பரிமாற்றங்களின் ஆதாரங்களை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், "அதானி குழுமத்தின் மொரீஷியஸ் பரிவர்த்தனைகள் குறித்த விவரங்களை மொரீஷியஸ் நிறுவனங்கள் மற்றும் அதானி குழுமத்தின் மின்னஞ்சல்கள் மூலம் கண்டுபிடித்தோம். அதில், 2013 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் மொரீஷியஸ் நிறுவனங்கள் மறைமுகமாக சுமார் பல மில்லியன் டாலர் மதிப்பிலான நிதியை (Opaque Funds) இந்திய பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட அதானி குழும பங்குகளில் முதலீடு செய்துள்ளது.

மொரீஷியஸ் நிறுவனம் என்ற பெயரில் அதானி குழும பங்குகளை வாங்கிய இரண்டு பேர் நாசர் அலி ஷபன் அஹ்லி மற்றும் தைவானின் சாங் சங்லிங் ஆவர். இவர்கள் அதானி குடும்பத்தின் மிகப் பெரிய வணிகக் கூட்டாளிகள். இவர்கள் இருவரும் அதானி குழும நிறுவனத்தில் ஒரு காலக்கட்டத்தில் இயக்குநர்களாக இருந்துள்ளனர்.

மேலும் அதானியின் சகோதரர் வினோத் அதானி தொடர்புடைய நிறுவனங்களிலும் நாசர் அலி, சாங் சங்லிங் ஆகிய இருவருக்கும் தொடர்பு உண்டு. 'ஆப்ஷோர்' அக்கவுண்ட்கள் மூலம் (வெளிநாட்டு கணக்குகள்) பல்வேறு முறைகேடுகள் செய்து செயற்கையாக பங்கு விலையை உயர்த்தி அதானி பங்குகளை நாசர் அலி, சாங் சங்லிங் வாங்கியுள்ளனர்" என விவரிக்கப் பட்டுள்ளது.

**கறுப்புப் பணத்தில் லாபம் பார்த்த அதானி!**

உலகில் ஒரு சில நாடுகள், அந்நாட்டில் முதலீடு செய்பவர்களின் பின்னணி குறித்து ஆராயாமல் முதலீடுகளைப் பெற்று அவர்கள் செய்யும் முதலீட்டிற்கு வரிச்சலுகைகளையும் அளித்து வருகிறது. இது கறுப்புப் பண பரிவர்த்தனைக்கு உதவும் ஒரு வழிமுறை. இதுபோன்ற செயல்திட்டங்களில் அதானி ஈடுபட்டு வருவதாக அதானி நிறுவனத்தின் சில மின்னஞ்சல்களிலிருந்தும் பல ஆய்வுகளை மேற்கோள் காட்டி ஓ.சி.சி.ஆர்.பி. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

**அதானி கொடுத்த பணமா?**

"நாசர் அலி சாங் முதலீடு செய்த பணம் அதானி குடும்பத்தால் கொடுக்கப்பட்டது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றாலும், அதானி குழு மத்தில் செய்யப்பட்டுள்ள அவர்களது முதலீடு அதானி குடும்பத்துடன் இணக்கமாக இருந்து செய்யப்பட்டது என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது" என ஓ.சி.சி.ஆர்.பி. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

**உரிமையாளர்கள் அடையாளம் காணப்படுவது முதல் முறை!**

கடந்த ஜனவரி 24இல் "கார்ப்பரேட் வரலாற்றில் மிகப்பெரிய புற்றுநோய்" என்ற தலைப்பில் அதானி குழும முறைகேடுகளை வெளியிட்டது அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் வணிக ஆராய்ச்சி நிறுவனம். ஹிண்டன்பர்க் அறிக்கையில் வரிவிகிதம் மிகக் குறைவாக உள்ள நாடுகளில் போலி 'ஷெல்' கம்பெனிகளைத் தொடங்கி (வெறும் லெட்டர் பேடு கம்பெனிகள்) அவற்றின் மூலமாக அதானி குழுமத்தில் முதலீடுகளை மேற்கொண்டு பங்கு மதிப்புகளை உயர்த்தியதாகவும், பிறகு வங்கிகளில் பெருமளவு கடன்களை வாங்கி முறைகேடான பரிவர்த்தனைகளை மேற்கொண்டதாகவும் அம்பலப்படுத்தப்பட்டது. ஹிண்டன்பர்க் அறிக்கையால் அதானியின் பங்குகள் ஆட்டம் கண்டது. அதானியின் பங்குகள் மொத்தமாக ரூ.13 லட்சம் கோடி அளவுக்கு இழப்பைச் சந்தித்தன.

இதனால், அதானியும் உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 3ம் இடத்திலிருந்து 30ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். ஆனால் ஹிண்டன்பர்க் அறிக்கையில் முறைகேடுகளை மட்டுமே குறிப்பிடப்பட்ட நிலையில், ஓ.சி.சி.ஆர்.பி. அறிக்கையில், அதானி பங்குகளின் சர்ச்சைக்குரிய உரிமையாளர்கள் பெயரும், அதற்கான விபரங்களையும் கொடுக்கப்பட்டுள்ளன. அதானி முறைகேடு விவகாரத்தில் உரிமையாளர்கள் அடையாளம் காணப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## 26 சுங்கச் சாவடிகளில்

# கட்டணம் உயர்வு! பொதுமக்கள் கண்டனம்!

## திரும்பப் பெற வலியுறுத்தல்!

சென்னை, செப். 2-

திருச்சி, சேலம், மதுரை உட்பட தமிழ்நாட்டில் உள்ள 26 சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் சுங்க கட்டணம் உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் மொத்தமுள்ள 54 சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வு இரண்டு பிரிவாக அமல் படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் மாதம் குறிப்பிட்ட சுங்கச்சாவடிகளுக்கும், செப்டம்பர் மாதம் மீதமுள்ள சுங்கச்சாவடிகளுக்கும் ஆண்டுதோறும் கட்டணம் உயர்த்திக்கொள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதித்துள்ளது.

இதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டுக்கான கட்டண உயர்வு தமிழ்நாடு முழுவதும் உள்ள 26 சுங்கச் சாவடிகளில் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.

திண்டுக்கல், திருச்சி, சேலம், மேட்டுப்பட்டி, உளுந்தூர்பேட்டை, மதுரை, தூத்துக்குடி உட்பட 26 சுங்கச்சாவடிகளிலும் கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது.

செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடியில் விதிகளுக்கு முரணாக 28 கோடி ரூபாய் கூடுதல் சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டிருப்பது இந்திய தலைமைக் கணக்காயரின் தணிக்கை அறிக்கை மூலம் தெரியவந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் உள்ள 26 சுங்கச்சாவடிகளில் நேற்று நள்ளிரவு முதல் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

இதற்கு வாகனஓட்டிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கட்டண உயர்வை உடனே திரும்ப பெற வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; குஜராத் மாநிலத்தில் புதிய புதிய கோடீஸ்வரர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்களாமே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; புள்ளி விவரங்களில் இருந்து அதைத்தான் புரிந்து கொள்ள முடிகிறது.**

**ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் சம்பாதிப்போரின் எண்ணிக்கைஒரேஆண்டில்49சதவிகிதம்அதிகரித்திருக்கிறது. அதைப்போல, கார்ப்பரேட் நிறுவனப் பிரிவிலும் 28 சதவிகிதம் புதிய கோடீஸ்வரர்கள் உருவாகியிருக்கிறார்கள்.**

**கடந்த அய்ந்தே ஆண்டுகளில் அங்கே, கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமாகி இருக்கிறது.**

**இந்த விவரங்கள் ஒன்றிய நேரடி வரிகள் வாரியத்தின் ( Central Board of Direct Taxes ) தரவுகள் தெரிவிக்கின்றன.**

**பிரதமர் மோடி அவர்களும், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களும் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.**

## தெலங்கானா மாநிலத்திலும் செயல்படுத்த திட்டம்!

# இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## காலை உணவுத்திட்டம் செயல்படும் விதம் குறித்து அறிய சென்னைக்கு வருகை தந்த தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் பாராட்டு!

சென்னை, செப். 2 -

இந்தியாவுக்கு வழிகாட்டுகிறது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்று காலை உணவுத் திட்டம் செயல்படும் விதம் குறித்து அறிய சென்னைக்கு வருகை தந்த தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

அரசுப் பள்ளி மாணவர்களுக்கென பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். முதற்கட்டமாக 1,543 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவர்களுக்கு திட்டம் தொடங்கப்பட்டது. அடுத்தக்கட்டமாக இந்த ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாடு முழுவதும் உள்ள 31,008 பள்ளிகளில் பயிலும் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினார்முதலமைச்சர் அவர்கள்.

இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றி இந்தியா முழுக்க பெரும் வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து தெலுங்கானா மாநிலத்திலும் செயல்படுத்தும் அம்மாநில அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது. அதற்காக தமிழ்நாடு அரசை தொடர்பு கொண்டு தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நேரில் வந்து பார்வையிட அம்மாநில உயர் அலுவலர்கள் ஆர்வம் தெரிவித்திருந்தனர்.



தமிழ்நாட்டில் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவு திட்ட செயல்பாடுகளை தெலங்கானா அதிகாரிகள் வருகை தந்து ஆய்வு செய்தனர்.

இதையடுத்து தெலுங்கானா மாநில அரசு தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொண்டதன் பேரில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட தெலங்கானாவிலிருந்து மூத்த அரசு அதிகாரிகள் ஆகஸ்ட் 30, 2023 அன்று சென்னை வந்து சேர்ந்தனர். ஆகஸ்ட் 31, 2023 அன்று மைய சமையல்கூடம் ஒன்றுக்கும் பல்வேறு பள்ளிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

ஸ்மிதா சபர்வால் (தெலங்கானா முதலமைச்சரின் செயலாளர்)

டாக்டர். கிறிஸ்டினா. இசட் சொங்து ( அரசுச் செயலாளர், பழங்குடியினர் நலத் துறை)

கருணா வக்காட்டி (அரசுச் செயலாளர், கல்வித் துறை)

ப்ரியங்கா வர்கீஸ் (தெலங்கானா முதலமைச்சரின் சிறப்புப் பணி அலுவலர்)

பாரதி ஹொலிக்கேரி (அரசு சிறப்புச் செயலாளர்)

பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் துறை ஆகியோர் தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

**இராயபுரத்தில்**

முதலில் ராயபுரத்தில் இருக்கும் சென்னை மாநகராட்சி பள்ளிக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் காலை உணவு தயார் செய்யும் மைய சமையல் கூடத்தை இக்குழுவினர் பார்வையிட்டனர். அங்கு சமையல் பொருட்கள் பெறப்படும் விதம், பணியாளர்கள் பணியாற்றும் தன்மை, சுகாதாரமாக உணவு தயாரிக்கப்படும் முறை, தரபரிசோதனைகள் செய்யப்படும் விதம், தயாரிக்கப்பட்ட உணவு வாகனங்கள் மூலம் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் முறை, வாராந்திர உணவு அட்டவணை முதலான ஒவ்வொன்றையும் பற்றி பணியாளர்களோடும் நம் மாநில அலுவலர்களோடும் உரையாடி அறிந்து கொண்டனர்.

காலை ஏழு மணிக்கு பார்வையிடத் தொடங்கிய தெலங்கானா குழுவினர் எட்டு மணிக்கு மைய சமையல் கூடத்திலிருந்து புறப்பட்டு அருகில் இருக்கும் ஆரத்தூன் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி உருது தொடக்கப் பள்ளிக்குச் சென்றது. அங்கே மாணவர்களுக்கு உணவு எவ்விதம் வழங்கப்படுகிறது என்பதைப் பார்வையிட்டு மாணவர்களோடு உரையாடி மாணவர்களின் கருத்துகளையும் அறிந்து கொண்டனர்.

**திருவள்ளூர் மாவட்டத்தில்**

உருது தொடக்கப் பள்ளியில் பார்வையிட்ட பின்னர் திருவள்ளூர் மாவட்டம் அழிஞ்சி வாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சென்ற குழுவினர் அங்கே கிராமப்புறப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளில் இந்தத் திட்டம் எப்படி சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் நடைமுறைப் படுத்துவதில் இருக்கும் சவால்களை தமிழ்நாடு அரசு எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதையும் அரசு அலுவலர்களிடமும் ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் உரையாடி தெரிந்து கொண்டனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் க. இளம்பகவத், தெலங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழுவோடு உடன் சென்று, அவர்களுக்கு வேண்டிய தகவல்களைத்தந்து இத்திட்ட செயல்பாடுகளையும் விளக்கினார். சமூகநலத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. கார்த்திகா, சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல துணை ஆணையர் சிவகுரு பிரபாகரன், திருவள்ளுவர் கூடுதல் ஆட்சியர் சுகபுத்திரா ஆகியோர் இந்த ஆய்வில் பங்கு பெற்றனர்.

திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் கண்ட தெலங்கானா மாநிலத்தின் அரசு அதிகாரிகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை பற்றியும் அது செயல்படுத்தப்படும் விதம் குறித்தும் பாராட்டினர்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் பாராட்டு!**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை வரவேற்பு தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் காலை உணவு திட்டம், நாட்டிற்கே முன்மாதிரியான திட்டம் என பல தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். அத்திட்டத்தை தங்களது மாநிலத்திலும் செயல்படுத்தும் நோக்கில் தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் சென்னையில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டனர். இது குறித்து தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்திரராஜனிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த ஆளுநர் தமிழிசை, காலை உணவு திட்டம் நல்ல திட்டம். இதில் மாற்று கருத்து இல்லை என்றும், குழந்தைகளுக்கு காலை உணவு கொடுப்பதை தான் வரவேற்பதாகவும் கூறினார். பசியோடு யாரும் இருக்கக்கூடாது என்ற அவர், ஊட்டச்சத்து குறைபாடுகள் அதிகமாக குழந்தைகளிடம் காணப்படுவதாகவும், மருத்துவர் என்ற முறையில் நல்ல சத்தான உணவு கொடுக்கப் படுவதை வரவேற்பதாகவும் அவர் கூறினார்.



திருவல்லிக்கேணி தி.மு.க. முன்னாள் பகுதிச் செயலாளர் க.வே.செழியன் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஐஸ்ஹவுஸ் புரம் பிரகாசம் சாலையில் சமபந்தி விருந்து நடந்தது. இதில் தயாநிதிமாறன் எம்.பி. கலந்துகொண்டு பொதுமக்களுக்கு உணவு பரிமாறினார். இதில், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் சிற்றரசு, பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், ஆர்.என்.துரை, க.வே.மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில்

# 140 கோடி இந்தியர்களையும் உளவு பார்க்கிறது மோடி அரசு!

## இஸ்ரேலில் இருந்து புதிய உளவு மென்பொருள் வாங்கியது!

லண்டன், செப்.2-

இஸ்ரேலில் இருந்து வாங்கிய புதிய சாப்ட்வேர் மூலம் 140 கோடி இந்தியர்களையும் உளவு பார்க்கும் வேலையை மோடி அரசு தொடங்கி உள்ளதாக லண்டன் பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்த சாப்ட்வேரில் இருந்து இமெயில், வாட்ஸ்அப், மெசேஜ், போன் கால் உள்பட எதுவும் தப்பாது, அத்தனையும் கண்காணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவில் 2019ம் ஆண்டு பெகாசஸ் மென்பொருள் மூலம் எதிர்க்கட்சி தலைவர்கள், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், முக்கிய தொழில் அதிபர்களை பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ அரசு உளவு பார்ப்பதாகவும், அனைவரது செல்போனும் ஒட்டுக்கேட்கப்படுவதாகவும் பரபரப்பு புகார் எழுந்தது.

இதை ஒன்றிய அரசு அப்போது மறுத்தது. இருப்பினும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி தனது செல்போன் ஒட்டுக்கேட்கப்படுவதாக தெரிவித்தார். 2021ஆம் ஆண்டும் இந்த குற்றச்சாட்டு எழுந்தது. இதை தொடர்ந்து பெகாசஸ் ஸ்பைவேர் பற்றி வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது, அதில் ஒரு இணைப்பு மூலம் மொபைல் போன்களை ஹேக் செய்து மின்னஞ்சல்கள், அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை ரகசியமாக பதிவு செய்ததாக கூறியது.

நாடாளுமன்ற தேர்தல் தற்போது நெருங்கி வரும் நேரத்தில் இஸ்ரேலில் இருந்து வாங்கிய இன்னொரு சாப்ட்வேர் மூலம் உளவுபார்க்கும் வேலையை மோடி அரசு தொடங்கி இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த முறை முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் தொழில் அதிபர்கள் என்று இல்லாமல் ஒட்டு மொத்தமாக நாட்டில் உள்ள 140 கோடி மக்களையும் உளவு பார்க்கும் பணியை மோடி அரசு தொடங்கி இருப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்திகளை வெளியிட்டு உள்ளது.

140 கோடி இந்தியர்களின் அத்தனை செல்போன் அழைப்புகள், மெசேஜ், வாட்ஸ்அப் கால், இமெயில், இன்டர்நெட் உபயோகம் உள்ளிட்ட அத்தனையும் திருடப்படுகிறது. இதற்காக அதிகம் அறியப்படாத இஸ்ரேலிய சாப்ட்வேர் குழுக்கள் கடலுக்கு அடியில் பதிக்கப்பட்டுள்ள கேபிள் கரையை தொடும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கேபிள் நிலையங்களில் நிறுவப்பட்ட கண்காணிப்பு உபகரணங்களில் இருந்து இந்த தகவல்களை திருடிக் கொள்வதாகவும், அத்தனை அழைப்புகளையும் பதிவு செய்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள கடலுக்கு அடியில் போடப்பட்டுள்ள கேபிள்கள் வாயிலாக இஸ்ரேலிய உளவு சாப்ட்வேர் நிறுவனங்கள் இந்தியா முழுவதும் வசிக்கும் 140 கோடி மக்களின் அத்தனை தகவல்களையும் திருடி, மோடி அரசிடம் ஒப்படைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் அத்தனை பேரின் தகவல்களும், போன் அழைப்புகளும் சல்லடையாக சலிக்கப்பட்டு, தேவைக்கேற்ப இந்திய பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வழங்க வசதியாக புதிய மென்பொருள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 140 கோடி பேரின் தகவல்களையும் தேடவும், நகல் எடுக்கவும், அதை பதிவு செய்யவும், பாதுகாக்கவும் தேவை யான வசதிகள் இந்திய அரசுக்கு இஸ்ரேல் மென்பொருள் நிறுவனத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தகவல் தொடர்பு சந்தையின் வளர்ச்சியின் வேகம், சக்தி வாய்ந்த கண்காணிப்பு கருவிகளை விற்க போட்டியிடும் நிறுவனங்களின் தொழில்துறை இதற்கு உதவி செய்துள்ளது. வீகியர், காக்னிட், செப்டியர் ஆகிய இஸ்ரேல் நிறுவனங்கள் தான் இந்த வேலையை மோடி அரசுக்காக செய்து கொடுக்கின்றன. இந்த நிறுவனங்களின் விளம்பரங்களிலும் இது போன்ற வேலைகளை செய்வதாக விளம்பரப் படுத்தி உள்ளது. செப்டியரின் விளம்பர வீடியோ வின்படி, அதன் தொழில்நுட்பம் மூலம் குரல் பதிவு, மெசேஜ், வாட்ஸ்அப் கால், மெசேஜ், இமெயில் தகவல் ஆகியவற்றை தனித்தனியாக பிரித்தெடுக்கிறது. மற்றொரு இஸ்ரேலிய நிறுவனமான காக்னிட் இந்தியாவில் கண்காணிப்பு தயாரிப்புகளை வழங்குகிறது.

2021 ஆம் ஆண்டில் அட்லாண்டிக் கவுன்சிலால் எச்சரிக்கப்பட்ட நிறு வனங்களில் செப்டியரும் ஒன்றாகும். தற்போது அந்த நிறுவனத்துடன் இந்திய மக்கள் அனைவரையும் உளவு பார்க்க மோடி அரசு கைகோர்த்துள்ளதாக பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. உலகெங்கிலும் உள்ள நாடுகளில் நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் திட்டங்களில் பணிபுரிந்த 4 பேர், இந்தியா தற்போது 140 கோடி பேரின் தகவல்களை திரட்ட கொடுத்துள்ள அனுமதி அசாதாரணமானது என்று கூறியுள்ளனர். இந்தஅனுமதி மூலம் தொலை தொடர்பு நிறுவனங்கள் வெளிப்படையாகக் கண்காணிப்பு உபகரணங்களை கேபிள் லேண்டிங் ஸ்டேஷன்கள் மற்றும் டேட்டா சென்டர்களில் நிறுவ அரசால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இந்த இஸ்ரேல் நிறுவனங்களின் அனைத்து கண்காணிப்பு கோரிக்கைகளும் நாட்டின் உள்துறை செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டு, இந்த கண்காணிப்பு கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படுவதாக மோடி அரசு தெரிவித்து உள்ளது. ஆனால் இது வெற்று கட்டுப்பாடு.

இதன் மூலம் எந்தவித பயனும் இல்லை. இந்திய மக்கள் அனைவரின் தகவல்களும் திருடப்படுவது உறுதி என்று இந்த கேபிள் திட்டங்களில் பணிபுரிந்தவர்கள் தெரிவித்து உள்ளனர். இந்தியாவில் 140 கோடி பேரின் தகவல்களை திருட இஸ்ரேல் நாட்டின் செப்டியர் நிறுவனம், தன்னுடைய சட்டப்பூர்வ இடைமறிப்பு தொழில்நுட்பத்தை முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ, வோடபோன் ஐடியா மற்றும் சிங்கப்பூரின் சிங்டெல் உள்ளிட்ட தொலைத்தொடர்பு குழுக்களுக்கு விற்றுள்ளது. இதனால் இஸ்ரேல் உளவு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள அத்தனை பேரையும் உளவு பார்க்க வழிவகை செய்யப் பட்டுள்ளது. லண்டன் பைனான்சியல் டைம்ஸில் வெளியான இந்த தகவல் நாடு முழுவதும் உள்ள அனைவரையும் அதிர்ச்சி அடைய செய்து உள்ளது.

2011 ஆம் ஆண்டில் இந்திய உள்துறை அமைச்சகம், ஒவ்வொரு மாதமும் 7,500 முதல் 9,000 பேரின் செல்போன்களை அரசு காரணத்திற்காக ஒட்டுகேட்பதாக தெரிவித்தது.

பைனான்சியல் டைம்ஸ்சில் வெளியான செய்தி மூலம் இஸ்ரேலிய தொழில்நுட்ப நிறுவனங்க ளான காக்னிட் மற்றும் செப்டியர்களிடமிருந்து சக்திவாய்ந்த கண்காணிப்பு கருவிகளை வாங்குவதன் மூலம் பிரதமர் மோடி தலைமையிலான அரசு தனது குடிமக்களை உளவு பார்க்கிறது என்று குற்றம் சாட்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் பல நாடுகளில் உள்ள பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் பல நிறுவனங்களில் காக்னிட்டும் இருப்பதாக மெட்டா குற்றம் சாட்டியது.

உகாண்டா, ருவாண்டா நாடுகள் போல் இந்தியாவிலும் தற்போது அனைத்து மக்களின் செல்போன்களும் ஒட்டுமொத்தமாக உளவு பார்க்கப்படுவதாக பைனான்சியல் டைம்ஸ் தெரிவித்து உள்ளது.

ஒன்றிய அரசு பதில் அளிக்க மறுப்பு!

தங்கள் நாட்டு சட்டதிட்டப்படி, ஒப்பந்தப்படி உளவு மென்பொருள் விற்பனை செய்யப்பட்டதாக செப்டியர் நிறுவனம் தகவல் தெரிவித்து உள்ளது. ஆனால் இந்திய அரசு மற்றும் காக்னிட், வீகியர், ரிலையன்ஸ் ஜியோ, சிங்டெல் ஆகிய நிறுவனங்கள் இதுபற்றிய கேள்விக்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லை என்று பைனான்சியல் டைம்ஸ்தெரிவித்து உள்ளது.

**ஒப்புக்கொண்டது வோடபோன்!**

இஸ்ரேல் உளவு நிறுவனங்களிடம் இருந்து உளவு மென்பொருள் வாங்கியதாக வோடபோன் நிறுவனம் ஒப்புக்கொண்டதாக பைனான்சியல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில்,' ஒன்றிய அரசின் கடும் நிபந்தனைகள் அடிப்படையில் உளவு நிறுவனத்திடம் இருந்து லைசென்ஸ் பெற்றோம். இந்த நிபந்தனை காலம் எப்போது வேண்டுமானாலும் மாறலாம்' என்று தெரிவித்ததாக குறிப்பிட்டு உள்ளது.

---

### நெல்லை மாநகரக் கழக அவைத் தலைவர்

# டாக்டர் ப.பொன்மணி மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் - கழகத்தினர் அஞ்சலி!



நெல்லை.செப்.2-

நெல்லை மாநகர அவைத் தலைவர் டாக்டர். ப.பொன்மணி அவர்கள் (வயது 71 ) உடல் நலக்குறைவு காரணமாக அவரது இல்லத்தில் நேற்று (செப்.1) அதிகாலை 1:30 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து கழகத்தினர் திரளாக வந்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

கழகத்தின் நெல்லை நகர கழக செயலாளர்,நகர் மன்ற உறுப்பினர், நெல்லை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்தும் விபத்தில் கால்களை இழந்த பின்பும் கழகத்தின் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் அவை தலைவராக சிறப்பாக பணியாற்றி மறைந்த டாக்டர்.பத்மநாதன் அவர்களின் மகன் டாக்டர். ப.பொன்மணி அவர்கள் நெல்லை டவுண் சாமியார் சைக்கா தெரு முகவரியில் வசித்து வந்தார்.கடந்த 12.7.2023 அன்று நெல்லை மாநகர அவை தலைவராக டாக்டர்.ப. பொன்மணி தேர்வு செய்யப்பட்டார். பொறுப்பேற்ற காலத்திலிருந்து கழக பணியை சிறப்பாக ஆற்றி வந்தார்.

இந்நிலையில் டாக்டர். ப. பொன்மணி (வயது 71) அவர்கள் அவரது இல்லத்தில் நேற்று உடல் நலக்குறைவு காரணமாக அதிகாலை 1.30 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்னாருக்கு துணைவியார் டாக்டர்.பாகிரதி, மகன்கள் டாக்டர் பொன்.பத்மநாபன் அவரது சகோதரர் வைரமணி மற்றும் சகோதரிகள் உள்ளனர்.


இயற்கை எய்திய மாநகர அவைத் தலைவர் டாக்டர்.ப.பொன்மணி அவர்களின் உடலுக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் சரவணன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,பகுதி செயலாளர்கள் சுப்பிர மணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, துபாய் சாகுல், மாநகர நிர்வாகிகள் அண்ணா துரை, பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, குமார், சங்கரலிங்கம், பெரியதுரை,

நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பு சாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், தகவல் தொழில் பணி காசிமணி, உள்பட அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று நெல்லையில் நடைபெற்றது.

---

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா: நாக்பூர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. வரலாறு பாடத் திட்டத்தில், தி.மு.க. மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - சி.பி.ஐ. குறித்த அத்தியாயங்களை நீக்கிவிட்டு, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. குறித்த அத்தியாயங்களை புதிதாகச் சேர்த்திருக்கிறார்களாமே ?

**போண்டி :** **ஆமாய்யா; நாக்பூர் நகரம், பா.ஜ.க.வின் தாய் வீடு போன்றதும், மதவாதத்தையே மூலாதாரமாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைமை இடமும் ஆகும் என்பதை அனைவரும் அறிவர்.**

**அப்படி இருக்கும்போது நாக்பூர் பல்கலைக் கழகமும் மதவாத உணர்வுடனும், பா.ஜ.க. மற்றும் அதன் அடிவருடும் அ.தி.மு.க. ஆதரவு எண்ணத்துடனும், வெளிப்படையாகவே செயல்படுவது ஒன்றும் வியப்பளிக்கவில்லை.**

**ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜன சங்கம் குறித்த அத்தியாயங்கள் ஏற்கனவே அந்த பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், கல்விக் கூடங்களும் எவ்வாறு காவி மயமாகின்றன என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு!**

**தி.மு.க. குறித்த அத்தியாயத்தை நீக்கி இருப்பது பற்றிக் கழகம் கிஞ்சிற்றும் கவலைப்படாது.**

**“காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ ?”.**

---

### காலை உணவுத் திட்டம் தொடர்பாக

# பள்ளி இளம் மாணவர்கள் வரைந்த ஓவியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!




சென்னை,செப்.2–

கிருஷ்ணராயபுரம் ஒன்றிய நடுநிலைப் பள்ளி இளம் மாணவர்கள் காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஓவியம் ஒன்றை வரைந்து ‘உண்டி கொடுத்தோர்... உயிர் கொடுத்தோரே!’ என்று அதில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த ஓவியம் – டிராயிங் எப்படியாவது சி.எம். சாருக்கு அனுப்ப முடியுமா என்று ஆர்வமாக பிடிசாம்பலுக்கு கேட்டிருந்தார். அவரும் இதை தமது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு முதலமைச்சர் கவனத்தை ஈர்த்தார்.

ட்விட்டர் மூலம் இதைக் கவனித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

**இந்தக் குழந்தைகளின்**
**மகிழ்ச்சிக்கு முன்பு**
**அத்தனை பொய் பரப்புரைகளும்**
**தோற்றேபோகும்!**
**அவர்களின் ஓவியத் திறன்**
**மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்**

என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடாக முதலீடு குறித்து

# நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் ராகுல் காந்தி பேட்டி!



மும்பை,செப்.2-

அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடாக முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டி காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி பேட்டியளித்துள்ளார்.

அதானி முறைகேடு விவகாரத்தில் பிரதமர் மோடி தொடர்ந்து மவுனம் சாதிப்பது ஏன்? என்றும், அதானியின் முறைகேடுகள் குறித்து நாடாளு மன்ற கூட்டுக்குழு விசாரணை தேவை என்றம் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், இது குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் குறித்து பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை சுட்டிக்காட்டினார். இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டு, மீண்டும் முதலீடாக அதானி நிறுவனத்திற்கு வந்துள்ளதாகவும்,

அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளதாக ராகுல் காந்தி தெரிவித்தார்.

அதானி நிறுவன முறைகேடுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ராகுல்காந்தி வலியுறுத்தினார்.

100 கோடி டாலர்களுக்கும் மேல் மதிப்புள்ள பணம் இந்தியாவில் இருந்து பல நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பின்னர், இந்தப் பணம் இந்தியாவுக்கு திரும்பி உள்ளது. இந்தப் பணம் யாருடையது? பிரதமருக்கு நெருக்கமான ஒருவர் (அதானி) இதனை செய்ய எப்படி அனுமதிக்கப்படுகிறார் என்று கேள்வி எழுப்பிய ராகுல் காந்தி இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

“அதானி குழுமம் பங்கு முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதாக ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற இரண்டு பொருளாதார பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு, கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்தியாவில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் பல்வேறு நாடுகள் வழியாகச் சென்று மீண்டும் இந்தியாவுக்கு திரும்பி உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணம் யாருடையது? அதானியுடையதா அல்லது வேறு யாருடையதா?

கவுதம் அதானியின் சகோதரர் வினோத் அதானியும், அவருடன் சேர்ந்து இரண்டு வெளிநாட்டவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு வெளிநாட்டவர்கள் எவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள்? இதில் தனக்கு தொடர்பு இல்லை என்பதை பிரதமர் மோடி நிரூபிக்க வேண்டும்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி இருக்கிறது. இது பிரதமர் மோடிக்கு ஏற்பட்டிருக்கும் பதற்றத்தின் அறிகுறியாக இருக்கலாம். நாடாளுமன்றத்தில் நான் பேசியபோது அவருக்கு பதற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே, எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி திடீரென ரத்தானது. தற்போதைய அதானி விவகாரம், பிரதமருக்கு மிக நெருக்கமாக இருப்பதால், அவர் பதற்றத்தில் இருப்பதாக நினைக்கிறேன். அதானி விவகாரத்தை தொடும்போதெல்லாம், பிரதமர் மிகவும் சங்கடமாகவும், மிகவும் பதற்றமாகவும் இருக்கிறார்” என்று ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டாக்டர் பொ. பத்மநாபன்

### செப்டம்பர் 2 (1991)



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த

# மும்பையில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனை!

## சோனியா காந்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் – ராகுல் காந்தி உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

மும்பை, செப்.2–

**இந்தியா கூட்டணியின் 3வது ஆலோசனைக் கூட்டம் மும்பையில் தொடங்கியது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.கவிற்கு எதிராகக் கூட்டணி அமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. பீகார் மாநிலம் பாட்னாவில் எதிர்க்கட்சித் தலைவர்களின் முதல் கூட்டம் கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி நடைபெற்றது. இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர்களின் 2ஆவது ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் கடந்த ஜூலை மாதம் 17 மற்றும் 18 ஆகிய இரு தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இக்கூட்டணிக்கு இந்தியா எனப் பெயரிடப்பட்டது.

இந்நிலையில், இந்தியா கூட்டணியின் 3வது ஆலோசனை கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை தொடங்கியது. 2 நாட்கள் இக்கூட்டம் நடைபெற்றது. முன்னதாக இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக மும்பை வந்த தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலி னுக்கு விமான நிலையத்தில் தி.மு.க. மற்றும் மும்பைவாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். காங்கிரஸ், சிவசேனா மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அனைத்துக் கட்சி தலைவர்களும் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, மேற்குவங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி ஆகியோரும் பங்கேற்றனர். டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், மகாராஷ்டிர முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா, பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், கூட்டணிக்கான ஒருங்கிணைப்புக் குழு, தேர்தல் மேலாண்மை குழு அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தியா கூட்டணிக்கு அதிகாரபூர்வ செய்தி தொடர்பாளர்களை அறிவிப்பது, ஊடக, சமூக ஊடக குழுக்களை அறிவிப்பது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும், இந்தியா கூட்டணியின் லோகோ வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.






இந்தக் கூட்டத்தில் கூட்டணி தொடர்பாக பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, கூட்டணிக்கான பொதுவான குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்குவதற்கும், நாடு முழுவதும் பா.ஜ.க. அரசின் தோல்வி குறித்து போராட்டங்கள் நடத்துவதற்கும், கூட்டு பிரசார உத்திகளை வகுப்பது குறித்தும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

மும்பை கூட்டம் தொடர்பாக சிவசேனா கட்சி தலைவர்கள் உத்தவ் தாக்கரே மற்றும் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் ஆகியோர் மும்பையில் அளித்த பேட்டியில், ‘‘மும்பை கூட்டத்தில் 28 கட்சிகளை சேர்ந்த 63 தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். ஒட்டுமொத்த நாட்டையும் தங்கள் குடும்பமாக கருதும் எதிர்க்கட்சிகள் பாரத மாதாவை காக்க ஒன்றிணைந்துள்ளன. எங்களின் கொள்கைகள் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால் நோக்கம் ஒன்றே. இந்த நாட்டையும், ஜனநாயகத்தையும் காக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் ஒன்றிணைந்துள்ளோம். எங்கள் கூட்டணியில் பிரதமர் வேட்பாளராக பல முகங்கள் உள்ளன. ஆனால் பா.ஜ.க.வில் மோடியை தாண்டி வேறு யாராவது உண்டா? பிரதமர் மோடிக்கு சகோதரிகள் மீது திடீர் பாசம் வந்துள்ளது. இந்த 9 ஆண்டில் ஒருமுறை கூட ரக்ஷா பந்தன் வரவில்லையா? இந்தியா கூட்டணி வளர வளர, காஸ் சிலிண்டரை இலவசமாக கூட கொடுப்பார்கள். அவர்கள் எதைச் செய்தாலும் அதைப் பற்றி கவலையில்லை. மக்கள் புத்திசாலிகள், அவர்கள் அனைத்தையும் அறிவார்கள்’’ என்றனர்.

மகாராஷ்டிரா காங்கிரஸ் தலைவர் நானா படோல் அளித்த பேட்டியில், ‘‘மும்பை கூட்டத்தில் இந்தியா கூட்டணி ‘பா.ஜ.க. சலே ஜாவோ (பா.ஜ.க. வெளியேறு)‘ என்ற முழக்கத்தை உருவாக்கும்’’ என்று கூறியுள்ளார். சமீபகாலமாக பிரதமர் மோடி, எதிர்க்கட்சிகளை குறிவைத்து ‘ஊழல் வெளியேறு’ என பேசி வருகிறார். இதற்கு பதிலடி தரும் வகையில் ‘பா.ஜ.க. வெளியேறு’ என்ற முழக்கத்தை இந்தியா கூட்டணி அறிவிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

**பா.ஜ.க. கூட்டணி கட்சிகளும் வர உள்ளன**

மேலும், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் மனோஜ் ஜா கூறுகையில், ‘‘தற்போதைய ஆட்சியின் பிற்போக்கு கொள்கைகளுக்கு முற்போக்கான மாற்றீட்டை வழங்குவதற்கான தெளிவான திட்ட வரைபடத்துடன் மும்பை கூட்டம் அமையும்’’ என கூறினார். இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சமீபத்தில் கூறியிருந்தார். இந்நிலையில், காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா அளித்த பேட்டியில், ‘‘பா.ஜ.க. தனது தேசிய ஜனநாயக கூட்டணியில் 38 கட்சிகள் இருப்பதாக கூறி வருகிறது. இக்கூட்டணியில் மேலும் சில கட்சிகள் சேர வாய்ப்புள்ளதாக தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதில் உள்ள சுமார் 5 கட்சிகள் இந்தியா கூட்டணியில் இணைய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இன்னும் பல கட்சிகள் இந்தியா கூட்டணிக்கு வர உள்ளன. புதிதாக இணையும் கட்சிகள் குறித்து அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படும்’’ என்றார்.

**பிரதமர் பதவிக்காக சேரவில்லை:**

ஆம் ஆத்மி கட்சி எம்.பி. ராகவ் சதா நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், ‘‘பிரதமர் பதவிக்காக இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி சேரவில்லை. பிரதமர் போட்டியில் அரவிந்த் கெஜ்ரிவால் கிடையாது. பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மக்கள் மீது திணித்துள்ள வேலையில்லா திண்டாட்டம், விலைவாசி உயர்வு, பணவீக்கம் போன்றவற்றின் தீமைகள் மற்றும் கொடுமைகளில் இருந்து நாட்டை விடுவிப்ப தற்கும், சிறந்த இந்தியாவை உருவாக்குவதற்கும்தான் இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளோம்’’ என்றார்.

முன்னதாக அக்கட்சியின் தலைமை தேசிய செய்தி தொடர்பாளர் பிரியங்கா கக்கார், கெஜ்ரிவால் பிரதமர் வேட்பாளராக களமிறக்க தகுதியானவர் என கூறியதைத் தொடர்ந்து ராகவ் சதா பதிலளித்தது குறிப்பிடத்தக்கது.

**லோகோ வெளியீடு**

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்தியா கூட்டணிக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இந்தியா கூட்டணிக்கான லோகோ வெளியிடப்பட்டது.

---

## முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை இழிவுபடுத்துவதா?

# ‘தினமலர்’ நாளேட்டுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

*சென்னை, செப். 2 -*

*ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

**“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவர் உயர்ச்சி தாளாண்மை தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்.”** *என்று பசியின் கொடுமை பற்றி தமிழ் மூதாட்டி அவ்வை சொன்னார்.*



*பள்ளிக்குப் போகும் குழந்தைகள் காலை உணவு இன்றி பசியோடு சென்றால் உடல் சோர்வும் மனச்சோர்வும் அடைந்து கல்வி கற்பதில் பின்னடைவு ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டுதான் அரசு பள்ளிகளில் படித்து வரும் இலட்சக்கணக்கான ஏழை எளிய குடும்பத்து பிள்ளைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.*

*கடந்த ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று மதுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மேலும் விரிவு படுத்தப்பட்ட காலை உணவு திட்டத்தால் 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் பயிலும் 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.*

*நீதிக் கட்சி காலத்திலேயே சர்.பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர தந்தையாக இருந்த போது 1928 ஆம் ஆண்டு மதிய உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் மதிய உணவு திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.*

*அதன் பிறகு பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியிலும், பின்னர் வந்த எம்.ஜி.ஆர் ஆட்சியிலும் மதிய உணவு திட்டம் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டதால் லட்சக்கணக்கான ஏழை எளிய குழந்தைகள் பசியின்றி பள்ளிக்கு சென்று கல்வி கற்கும் நிலை உருவானது.*

*சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தை டாக்டர் கலைஞர் செயல்படுத்தினார்.*

*இந்நிலையில் தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்நாடு கல்வித் துறையில் முன்னேற வழிவகை செய்தார். இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தினமலர் நாளேடு இழிவுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளது கடும் கண்டனத்திற்குரியது.*

*சமூக நீதிக்கு எதிரான ஆணவ ஆதிக்க ஆரிய சனாதன மனப்பான்மை தினமலர் நாளேடு வெளியிட்ட செய்தி மூலம் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. தினமலரின் திமிருக்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.*

*பள்ளிக் குழந்தைகளின் காலை உணவு திட்டத்தை இழிவுபடுத்திய தினமலர் நாளேடு மன்னிப்பு கேட்க வேண்டும்.*

*இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

## வேலூரில் அ.தி.மு.க. ஆட்சியில் பெயர் நீக்கப்பட்டது:

# மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர்!

## தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கி அரசாணை!

*வேலூர், செப். 2 -*

*வேலூர் மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர் இணைத்து தமிழ்நாடு அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது.*

*வேலூரில் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம் என்ற பெயரில் - இயல் அறிவியல், கண்டுபிடிப்புகள், சுற்றுச் சூழல் மற்றும் தொழில் சார் உள்ளிட்டவைகளின் காட்சிக்கூடம் கொண்ட அறிவியல் மையம் 2011 ஜனவரி 25 முதல் செயல்பட்டு வருகிறது. அப்போதைய துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் இந்த அறிவியல் மையம் திறந்து வைக்கப் பட்டது.*

*அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு சூட்டப்பட்ட ‘டாக்டர் கலைஞர் கருணாநிதி’ என்ற பெயரை நீக்கி விட்டது. கடந்த 10 ஆண்டுகளாக பெயர் இல்லாமல் மாவட்ட அறிவியல் மையம் என்றே இருந்து வந்தது.*

*இதற்கிடையே வேலூர் தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் ப.கார்த்தி கேயன், மீண்டும் அந்த மாவட்ட அறிவியல் மையத்துக்கு டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று முன் இருந்தது போல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் எழுதியும் நேரில் வற்புறுத்தியும் இருந்தார்.*

*இதையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றார். தமிழ்நாடு அரசு இதை ஆய்வு செய்து, இனி வேலூரில் உள்ள மாவட்ட அறிவியல் மையத்திற்கு, ‘டாக்டர் கலைஞர் கருணாநிதி’ என்று பெயரை மீண்டும் சேர்த்து தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை சார்பில் அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.*

*மீண்டும் கலைஞர் பெயர் அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு அதிகாரப்பூர்வமாக சூட்டப்பட்ட தால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

---

## ஆசியக் கோப்பை கிரிக்கெட்

# இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதல்!

புதுடெல்லி, செப். 2 -

ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

2 போட்டிகள் இதுவரை நடைபெற்றுள்ள நிலையில், குரூப் ஏயில் உள்ள இந்திய அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் நாளை மோதுகின்றன. ஏற்கனவே பாகிஸ்தான் தனது முதல் போட்டியில் நேபாளத்தை வீழ்த்தியது.

இந்நிலையில், இந்தியாவை பாகிஸ்தான் எதிர்கொள்கிறது. இப்போட்டி இலங்கையில் Pallekale மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதற்காக இரு அணிகளும் இலங்கையில் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.




நெடுஞ்சாலைத்துறை மூலம் நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், வீரசோழன் மானாசாலை முதல் தேனி சாலை கி.மீ.0/0.3/810 வரை தரம் உயர்த்துதல் பணியை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளைத் துவங்கி வைத்தார்.




விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில், கட்டங்குடி நீருந்து நிலையம் முதல் அருப்புக்கோட்டை மதுரை சாலையில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி வரை ரூ.6 கோடி மதிப்பில் 300 மில்லி மீட்டர் அளவிலான DI குழாய் பதிப்பதற்கான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.





திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், 2வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறவிருக்கிறது. இளைஞர் அணி வரலாற்றில் இடம்பெறவுள்ள சேலம் மாநாட்டின் ஆக்கப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, ஆவடியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் நாடு போற்றும் முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை, நாளேடு மூலம் அவதூறு செய்யும் சனாதன சக்திகளை வீழ்த்துவோம் என எடுத்துரைத்தும், கழகத்தலைவர் அவர்களின் கட்டளையை ஏற்று மாநாட்டை வெற்றி பெறச்செய்வோம் என வாக்குறுதி அளித்த இளைஞரணி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., திருத்தணி சந்திரன் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

## பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு

# மனிதாபிமான அடிப்படையில் பதிலளித்து உதவிடுவீர்!

### ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி அதிகாரிகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

திருவள்ளூர், செப். 2 -

பொதுமக்கள் தரும் கோரிக்கை மனுக்களுக்கு மனிதாபிமானத்துடன் பதிலளித்து அவர்களுக்கு அதிகாரிகள் உதவிட வேண்டும் என்று, ரூ.35.83 கோடி மதிப்பில் 912 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நேற்று முன்தினம் (31.08.2023) பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட ரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு துறைகள் சார்பாக 912 பயனாளிகளுக்கு ரூ.35.83 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:

இந்த ஆய்வுக்கூடத்தை பொறுத்தவரை, முதல்வரின் முகவரியில் தரப்படும் மனுக்களுக்கு தரமான பதில்கள் தருவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மக்கள் தங்கள் கோரிக்கைகளை குறைகளை மனுக்கள் மூலமாகத்தான் தெரிவிப்பார்கள். இந்த மனுக்களின் மீது குறித்த காலத்திற்குள் பதில் அளிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மனுக்களுக்கு பதில் தந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் இல்லாமல் உங்கள் துறைக்கானது அல்ல என்று தெரிந்தாலும். அந்த நபருக்கு வேறு ஏதேனும் வகையிலாவது உதவலாம் என்று மனிதாபிமானத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஏழை எளிய மக்கள், மாற்றுத் திறனாளிகள் பெண்கள் ஆகியோர் தரும் மனுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் அளிக்குமாறும் உதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**உழவர் சந்தைகள்**

ஏழை எளிய மக்கள் தரும் மனுக்களை வெறும் தாளாக பார்க்காமல் அவர்களுடைய வாழ்க்கையாக பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி தெரிவிப்பார்கள்.

உழவர் சந்தையை பொறுத்தவரை இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகள் முழுமையாக பயன்படும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் தான் இந்த உழவர் சந்தை திட்டம். உழவர் சந்தை திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்னும் வேகமாக உருவெடுத்து செயல்பட வேண்டும். உழவர் சந்தைக்களுக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்தி தந்தால் விவசாயிகளும் மக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள். அதேபோல் கும்மிடிப்பூண்டியிலும் உழவர் சந்தை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து அங்கு உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டும். அலுவலர்கள் தங்கள் துறைக்கு தேவையான இடம் தேர்வு செய்ய செல்லும் பொழுது மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்விக்கும் மருத்துவத்திற்கும் தான் அதிக முக்கியத்துவம் தந்து திட்டங்களை தீட்டி வருகிறது. அதிலும் குறிப்பாக, பள்ளி கல்விக்கு அதிக நிதி ஒதுக்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள் தான். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உட்பட பல்வேறு முற்போக்கு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிக்கல்வியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே அரசு திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவ மாணவியர்களை பள்ளி கல்லூரிக்கு அழைத்து வருவது நம்முடைய பொறுப்பு என்பது உணர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நல்ல அனுபவம் உள்ளவர்கள் சிறப்பாக செயல்பட கூடியவர்கள் மக்களோடு நேரடி தொடர்பில் இருப்பவர்கள். எனவே அவர்கள் தரும் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் தந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கால நிர்ணயம்!**

பேருந்து நிலையம், சாலைகள் என ஒவ்வொரு அரசு திட்ட பணிகளும் எப்பொழுது முடிக்க முடியும் என்று அந்தந்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் இன்று தெரிவித்துள்ளீர்கள். பணிகளை விரைந்து நிறைவு செய்வது எப்பொழுது என்பது குறித்த காலத்தையும் நீங்களே நிர்ணயித்து உள்ளீர்கள். நீங்கள் இந்த காலகட்டத்திற்குள் முடிப்பதாக சொன்ன நாட்களை நான் குறித்து வைத்துள்ளேன். மாவட்ட ஆட்சியர் அவர்களோடு நீங்கள் ஒன்றிணைந்து இந்த குறிப்பிட்ட நாட்களுக்குள் பணிகளை நிறைவு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதில் சிறப்பாக செயல்படும் மாவட்டத்திற்கு பாராட்டுக்களும் தொய்வு ஏற்படும் மாவட்டங்களில் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது உங்களுக்கு நன்றாக தெரியும். ஆதலால் அதனை நன்குணர்ந்து நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்றைய ஆய்வின் அறிக்கை முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு மிகச் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆனால், அந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசுக்கு நற்பெயர் பெற்று தரும்படி அரசு அலுவலக உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாய்வு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், கரிகலவாக்கம் பகுதியில் நேற்று முன்தினம் (31.08.2023) தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் சார்பாக சென்னை எல்லை சாலை திட்டத்தின் கீழ் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழி சாலை (பிரிவு2) வரை ரூ1,540 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலை பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, இச்சாலை பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் , ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் கே.சங்கர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன்,திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீபாஸ் கல்யாண், முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), சுதர்சனம் (மாதவரம்), டி.ஜெ. கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி)

மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஒ. சுகபுத்ரா, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ், சார் ஆட்சியர் (பொன்னேரி) செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன், ஆவடி துணை காவல் ஆணையர் திருமதி.ஜெயலட்சுமி, தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக தலைமை பொறியாளர் டி. இளங்கோ, கண்காணிப்பு பொறியாளர் ஜி.தட்சிணாமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





DMK
LEGAL WING
கலைஞர் 100
1924 - 2023
தி.மு.க சட்டத்துறை சார்பில்
புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகளின்
கலந்தாலோசனை கூட்டம்
தலைமை
திரு என்.ஆர் இளங்கோ எம்.பி
செயலாளர் திமுக சட்டத்துறை
முன்னிலை
திரு இரா.விடுதலை
தலைவர் தி.மு.க சட்டத்துறை
வரவேற்புரை
திரு என்.மணிராஜ்
இணைச் செயலாளர் தி.மு.க சட்டத்துறை
சட்டத்துறை இணைச் செயலாளர்கள்
இ.பரந்தாமன் MLA கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex MLA
இரா.தாமரைசெல்வன் Ex MP கே.எம்.தண்டபாணி
பி.ஆர்.அருள்மொழி
சட்டத்துறை துணைச் செயலாளர்கள்
ஜெ.பச்சையப்பன் கே.சந்துரு பட்டி ஜெகன்நாதன்
ப.வைத்தியலிங்கம் எஸ்.தினேஷ்
தலைமைக் கழக வழக்கறிஞர்கள்
சூர்யா வெற்றிகொண்டான்
வீ.கவிகணேசன் கே.மறைமலை
சிறப்பு அழைப்பாளர்கள்
மாண்புமிகு
கே.என்.நேரு
நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு
எஸ்.ரகுபதி
சட்டத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பி.கே.சேகர்பாபு
இந்து சமய அறநிலையத்துறை (ம)
சென்னை பெருநகர வளர்ச்சி ஆணைய அமைச்சர்
திரு. ஆ.இராசா எம்.பி
கழக துணை பொதுச் செயலாளர்
திரு. ஆர்.எஸ்.பாரதி
கழக அமைப்புச் செயலாளர் திமுக
திரு. தயாநிதி மாறன் எம்.பி
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்
நன்றியுரை
சு.ராதாகிருஷ்ணன்
தி.மு.க சட்டத்துறை இணைச்செயலாளர்
நாள் : 02.09.2023 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : ஃபைஸ் மஹால்
(இம்பிரியல்,ஆல்பர்ட் தியேட்டர் அருகில்)
வேனல்ஸ் ரோடு எழும்பூர் – 600 008.



திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள மருத்துவமனை பணிபுரிய மருத்துவர், பல்மருத்துவர் ஆய்வக நுட்புனர் பதவிக்கு தற்காலிக பணிநியமன ஆணையை பெற்ற 49பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் வாழ்த்துப் பெற்றனர். அருகில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## 100 ஆண்டுகளில் ஆகஸ்ட் மாதத்தில் மிகக்குறைவான மழை!

புதுடெல்லி, செப்.2-

எல் நினோ தாக்கத்தால் இந்தியாவில் சராசரி மழைப்பொழிவு குறைந்துள்ளது. இந்தியாவில் ஆகஸ்ட் மாத மழைப்பொழிவு ஒரு நூற்றாண்டில் மிகக்குறைந்த அளவாகப் பதிவாகியுள்ளது. கடைசியாக 2005ல் குறைவான அளவில் ஆகஸ்ட் சராசரி மழைப்பொழிவு பதிவானது. அப்போது சராசரியை விட 25 சதவீதம் குறைவாக மழை பதிவாகியிருந்தது. இந்நிலையில். இந்தாண்டு ஆகஸ்டில் சராசரியை விட 36 சதவிகிதம் குறைவாக மழைப்பொழிவு பதிவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆகஸ்ட் மழைப்பொழிவு தேசிய அளவில் 10 சதவிகிதம் பற்றாக்குறையாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளது. பிராந்திய அளவில் கிழக்கு, வடகிழக்கில் 17 சதவிகிதம், மத்திய இந்தியாவில் 10 சதவிகிதம் மற்றும் தென் இந்தியாவில் 17 சதவிகிதம் என்று பதிவாகியுள்ளது. மேலும் ஜீன் முதல் செப்டம்பர் வரையிலான தென் மேற்கு பருவகாலத்தில் மழை இல்லாத நாட்கள் அதிகரித்துள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மாவீரர் பூலித்தேவரின் புகழ்

# தமிழ் நிலத்தில் என்றும் நிலைத்து நிற்கும்!

### 308 வது பிறந்தநாளையொட்டி - முதல்வர் வலைதளப் பதிவு!

மும்பை, செப்.2-

இந்திய விடுதலைப் போராட்ட மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்தநாள் நேற்று!

இந்நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில் “மாவீரர் பூலித்தேவரின் புகழ் என்றும் தமிழ் நிலத்தில் நிலைத்து நிற்கும்!'' என்று குறிப்பிட்டுள்ளனர்.

முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இந்திய நிலப்பரப்பில் முதன்முதலில் போர்முரசம் கொட்டி, விடுதலைப் போராட்டத்துக்கான உணர்வைக் கிளர்ந்தெழச் செய்த மாவீரர் பூலித்தேவரின் 308ஆவது பிறந்தநாள்!**

**அடக்க நினைத்தால் தமிழர் பொறுக்க மாட்டார், அந்நியர் ஆதிக்கத்தை அடித்து நொறுக்குவர் எனக் காட்டிய அவரது புகழ் என்றும் தமிழ் நிலத்தில் நிலைத்து நிற்கும்!**



இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## போலி பில்கள் மூலம்

# அதானி குழுமம் ரூ.6,278 கோடி மோசடி!

### உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 2-

அதானி குழுமம் தங்களது நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வாங்கியதில் போலி பில்கள் தயாரித்து 6 ஆயிரத்து 278 கோடி மோசடி செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷண் வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதிவில், அதானி குழும முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த ஒன்றிய வருவாய் புலனாய்வுத்துறை இயக்குநரகம், செபி அமைப்பிற்கு அனுப்பிய கடிதத்தை பகிர்ந்துள்ளார்.

அந்த கடிதத்தில், அதானி நிறுவனம் மின்சாரம் மற்றும் கட்டுமான நிறு வனங்களுக்கு இயந்திரங்களை உண்மையான விலையை விட கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ததாக போலி பில் தயாரித்து மோசடி செய்தது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போலி பில்கள் மூலம் 6 ஆயிரத்து 278 கோடி மோசடி செய்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரக நிறுவனம் மூலம் இந்த இயந்திரங்கள் வாங்கப்பட்டதாகவும், முறைகேடாக பெறப்பட்ட பணம் துபாயில் இருந்து மொரிசியசுக்கு அனுப்பப்பட்டதாகவும், பின்னர் அந்த பணம் இந்திய பங்குச்சந்தைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த முறைகேடு புகார் குறித்து விசாரணை நடத்துமாறு செபி அமைப்பிற்கு, ஒன்றிய வருவாய் புலனாய்வுத்துறை ஏற்கனவே கடிதம் எழுதியதையும் பிரஷாந்த் பூஷண் தனது சமூக வலைத்தள பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**காங்கிரஸ் குற்றச்சாட்டு!**

அதானி முறைகேடு விவகாரத்தில் ராகுல்காந்தியின் கேள்விகளுக்கு, பிரதமர் மோடி மவுனமாக இருக்கும் ஒவ்வொரு கணமும், சர்வதேச அரங்கில் இந்தியாவின் நற்பெயர் மேலும் கெடும் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி., ராகுல்காந்தி, அதானி நிறுவனத்தின்முறைகேடுகள் குறித்து பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை சுட்டிக்காட்டி, அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், அதானி முறைகேடு விவகாரத்தில்ராகுல்காந்தியின்கேள்விகளுக்கு, பிரதமர் மோடி மவுனமாக இருக்கும் ஒவ்வொரு கணமும், சர்வதேச அரங்கில் இந்தியாவின் நற்பெயர் மேலும் களங்கம் கெடும் என்று தெரிவித்துள்ளார். அதானி முறைகேடு விவகாரத்தில் பிரதமர் மோடியிடம் இருந்து தெளிவான பதில்களை காங்கிரஸ் கோருவதாக தெரிவித்துள்ள கே.சி.வேணுகோபால், முறைகேட்டில் தொடர்புடைய அனைத்து நிதிப் புழக்கத்தை யும் முழுமையாக ஆராய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; தனது சொந்தப் பங்குகளை (Shares ) தானே ரகசியமாக வாங்கி, பெரும் கொள்ளை அடித்திருக்கிறாராமே சர்ச்சைக்குள்ளாகி வரும் திடீர்ப் பெரு முதலாளி, குஜராத்தைச் சேர்ந்த அதானி ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; இந்த கொள்ளையை ‘ஓ.சி.சி.ஆர்.பி.’ ( OCCRP = Organised Crime and Corruption Reporting Project ) என்ற அமெரிக்க துப்பறியும் அமைப்பு ஆதாரங்களுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.**

**தன்னுடைய வீட்டை, தனக்கே விற்று, யாராவது கொள்ளை லாபம் சம்பாதிக்க முடியுமா ?**

**முறைகேடு - ஊழல் செய்வதில் கைதேர்ந்து கரைகண்ட அதானி அதைச் சாத்தியப்படுத்தி, மிகப் பெரிய கொள்ளைக் ‘கோமான்!’ என்பதை நிரூபித்திருக்கிறார் !.**

## மதுரை ‘எய்ம்ஸ்’ திட்ட டெண்டர்

# ஆலோசனை நிறுவனம் மீது ஊழல் குற்றச்சாட்டு!

### விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என புகார்!

மதுரை, செப். 2-

மதுரை எய்ம்ஸ் திட்ட டெண்டர் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆலோசனை நிறுவனம் மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அந்நிறுவனம் ஆயிரத்து 528 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதும், சி.பி.ஐ. தரப்பில் 8 வழக்குகள்நிலுவையில்உள்ளதும் தெரிய வந்துள்ளது.

மதுரை எய்ம்ஸ் கட்டுமானத்திற்கான டெண்டர் வழங்குவதற்கு ஆலோசகராக சேலத்தைச் சேர்ந்த முகேஷ் அசோசியேட்ஸ் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தேர்வு முறைகேடானது என்றும், இந்நிறுவனம், ஏற்கனவே நடைபெற்ற பல்வேறு பணிகளில் முறைகேடு செய்துள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முறைகேடுகள் மூலம் ஆயிரத்து 528 கோடி ரூபாய் அந்நிறுவனம் பணம் ஈட்டியுள்ளதாகவும், சி.பி.ஐ. தரப்பில் 8 வழக்குகள் இருப்பதாகவும் புகார் தெரிவித்து ஒன்றிய சுகாதாரத் துறைக்கு மற்றொரு நிறுவனம் புகார் கடிதம் அனுப்பி உள்ளது. ஏற்கனவே, சி.பி.ஐ. விசாரணை வளையத்தில் இருக்கும் நிறுவனத்தை எய்ம்ஸ்க்கு ஆலோசகராக தேர்வு செய்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உரிய விதிகளை பின்பற்றாமல் அந்நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆன்லைன் டெண்டர்கள் நடைபெற்று வந்த நிலையில் நேரடி நியமனமாக இந்த நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்தநாள்! தென்காசி வடக்கு மாவட்டம்-

# நெற்கட்டும் செவலில் - பூலித்தேவரின் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

### அரசின் சார்பில் - அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு மாலை அணிவித்தனர்!

தென்காசி.செப்.2-

தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் நெற்கட்டும் செவலில் நேற்று (1.9.2023 வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் சுதந்திரப் போராட்ட மாவீரர் மாமன்னன் பூலித்தேவரின் 308 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நெற்கட்டும் செவலில் அன்னாரது மணி மண்டபத்தில் உள்ள மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன்,தங்கம் தென்னரசு,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ,தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார்,மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன்,ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட நெற்கட்டும் செவலில் சுதந்திரப் போராட்ட மாவீரர் மாமன்னன் பூலித்தேவரின் 308வது பிறந்தநாள் விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நேற்று (1.9.2023 - வெள்ளிக்கிழமை) தமிழக அரசு சார்பில் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள நெற்கட்டும் செவலில் உள்ள மணிமண்டபத்தில் அமைந்துள்ள மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அன்னாரது 308 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்,நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பங்கேற்று தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி தனுஷ் எம் குமார் எம்.பி,மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யு.எஸ்.டி.சீனி வாசன்,பரமகுரு,மா.செல்லத்துரை,தீர்மான குழு உறுப்பினர் சரவணன்,மாவட்ட அவைத் தலைவர்கள் பத்மநாபன்,

சுந்தர மகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை,பொருளாளர்கள் சரவணன் ஷெரீப்,பொதுக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமிபாண்டியன்,சாகுல் ஹமீது, வெள்ளத்துரை,மாரிசாமி,தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி,மாரிசாமி,ஒன்றிய கழக செயலாளர்கள் பொன்.முத்தையா பாண்டியன்,பூசைப் பாண்டியன், மாரிமுத்து,பெரியதுரை,வெற்றி விஜயன், கடற்கரை,கிறிஸ்டோபர்,சேர்ம துரை, ராமச்சந்திரன்,நகர செயலாளர்கள் அந்தோணிசாமி,

பிரகாஷ்,பேரூர் கழக செயலாளர்கள் டாக்டர் செண்பக விநாயகம், குருசாமி, ரூபி மனோகரன்,மாரி முத்து,உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை திருமங்கலம் நகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியினை சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்ட மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மாணவிகளுக்கு வழங்கிய போது எடுத்தபடம். உடன் நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார், துணை சேர்மன் ஆதவன் அதியமான் மற்றும் ஆசிரியர்கள், நகராட்சி உறுப்பினர்கள், கழகத்தினர் உள்ளனர்.

## துரை.கி.சரவணன் தலைமையில்

# நெல்லை மண்டல தி.மு.க பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### கு.கருணாநிதி சிறப்புரை! சி.பிரதீப்-வே. உமாகாந்த் பங்கேற்பு!

நெல்லை செப்:2-

நெல்லை மண்டல திமுக பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் 25.08.2023 வியாழக்கிழமை பாளையங்கோட்டை ஆர்யாஸ் ஏ.சி மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி சிறப்புரையாற்றினார், மாநில தலைவர் துரை.கி.சரவணன் தலைமை உரையாற்றினார்.

நெல்லை மண்டல பொறுப்பாளர், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் சி.பிரதீப் மற்றும் மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த் ஆகியர்முன்னிலைவகித்தார்கள்.

தலைமை கழகம் அறிவித்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாக கொண்டாட பொறியியல் கல்லூரிகளில் பேச்சுப் போட்டி, கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த கேட்டுக் கொண்டார்கள்.

நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த நெல்லை மத்திய, நெல்லை கிழக்கு, ராமநாதபுரம், சிவகங்கை, தென்காசி வடக்கு,தென்காசி தெற்கு,தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி மேற்கு,கன்னியாகுமரி கிழக்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்டத் துணைத் தலைவர்கள்,மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் மற்றும் மாநகர துணை அமைப்பாளர்கள் முழுமையாக பெரும் திரளாக பங்கேற்றார்கள்.

இந்த கூட்டத்திற்கு மிக சிறப்பாக ஏற்பாடு செய்த நெல்லை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அருணன் வரவேற்புரை ஆற்றினார். நெல்லை மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அருள்வின் ரெற்றிக்கோ நன்றி உரையாற்றினார்.



நெல்லை மண்டல தி.மு.க பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் பாளையங்கோட்டை ஆர்யாஸ் ஏ.சி மஹாலில் பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி சிறப்புரையாற்றினார். நெல்லை மண்டல பொறுப்பாளர்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் மற்றும் மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை கழகம் அறிவித்த கலைஞர் நூற்றாண்டு விழாவை தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொறியியல் கல்லூரிகளில் பேச்சுப்போட்டி, கவியரங்கம், பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.நிகழ்ச்சி ஏற்பாட்டினை நெல்லை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அருணன் செய்திருந்தார்.நெல்லை மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அருள்வின் ரெற்றிக்கோ நன்றி கூறினார்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணம் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் அறிவுசார் மையம் கட்டுமான பணிகளை குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு. ரெ. மகேஷ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த அறிவுசார் மையமானது மாணவர்களுக்கு மிகப்பெரிய வழிகாட்டி மையமாக அமையும். தற்போது 95 சதவீத பணிகள் நிறைவுற்று விரைவில் திறக்கப்பட உள்ளது. இந்த மையத்தில் நூலகங்கள், கணினிகள், ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் உட்பட பல்வேறு வசதிகள் இங்கு இடம்பெறும். ஆய்வில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், இளநிலை பொறியாளர் ராஜா, மாநகராட்சி அதிகாரிகள், மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மண்டல தலைவர் ஜவகர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்த நாளான நேற்று, தென்காசி வடக்கு மாவட்டம் – நெற்கட்டும் செவலில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, அரசின் சார்பில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## சென்னை மெட்ரோ: 85 லட்சத்து 89 பேர் பயணம்!

சென்னை, செப். 2 -

மெட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னையில் இந்த ஆண்டு ஜூலை மாத த்தைவிட ஆகஸ்ட் மாதத்தில் 3 லட்சத்து 36 ஆயிரத்து 215 பயணிகள் மெட்ரோ இரயில்களில் அதிகம் பயணித்துள்ளதாகவும், இந்த பயணிகளின் எண்ணிக்கை மெட்ரோ இரயில் சேவை தொடங்கியதில் இருந்து இதுநாள் வரையிலான எண்ணிக்கையில் இதுவே அதிக எண்ணிக்கை என்றும் மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 66 லட்சத்து 7 ஆயிரத்து 458 ஆக இருந்த மெட்ரோ பயணிகள் எண்ணிக்கை, ஆகஸ்ட் மாதத்தில் 85 லட்சத்து 89 ஆயிரத்து 977 ஆக உயர்ந்துள்ளதாக மெட்ரோ நிறுவனம் கூறியுள்ளது. அதிகபட்சமாக ஆகஸ்ட் 11 ஆம் தேதி 3 லட்சத்து 29 ஆயிரத்து 920 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** அண்ணே; இந்த நிதி ஆண்டின் (2023 - 2024) முதல் 4 மாதங்களிலேயே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிதிப் பற்றாக்குறை ( Fiscal Deficit ) 33.9 சதவீதம் என்றும்; இது இந்த நிதி ஆண்டு முழுமைக்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்த அளவை மிகவும் நெருங்கிவிட்டது என்றும்; செய்தி வெளியாகி இருக்கிறதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அந்த விவரங்களை, ஒன்றிய நிதிக் கணக்குகளின் தலைமை அலுவலர் ( Controller General of Accounts ) வெளியிட்டுள்ள தரவுகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.**

**நிதிப் பற்றாக்குறை என்பது வருவாயைவிட, செலவுகள் அதிகமாகும்போது, ஏற்படும் வித்தியாசம் ஆகும்.**

**ஜூலை முடிவில், இந்த நிதி ஆண்டின் முதல் 4 மாதங்களில், ஒன்றிய பா.ஜ.க. அரசு, வருவாயைவிட, 6.06 லட்சம் கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்திருக்கிறது.**

**இது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முந்தைய ஆண்டல்லவா? இறுதிக் கட்ட எத்தனித்தலாக, தற்காலிகமான அறிவிப்புகளைச் செய்தேனும்,நாட்டு மக்களின் நிரந்தரமான நலனில் நாட்டம் கொண்டிருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திட வேண்டும் அல்லவா? அதனால்தான் இந்த 4 மாதங்களில் இப்படி நானாவிதச் செலவுகள்.**

**இந்த அறிவிப்பு வேஷங்களையெல்லாம் இந்திய வாக்காளர்கள் நம்ப வேண்டுமே!**

### அரசு – அரசு சார்ந்த நிறுவனங்களில் – அனைவர்க்கும்

# பாரபட்சமின்றி பணிவாய்ப்புகள் வழங்குவது ‘திராவிட மாடல்’ அரசு!

### திண்டுக்கல் - மருத்துவத் துறை நிகழ்ச்சியில் - அமைச்சர் இ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், செப்.2-

திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் பணிபுரிய மருத்துவர், பல்மருத்துவர் ஆய்வக நுட்புனர், உட்பட 49பேருக்கு தற்காலிக பணிநியமன ஆணையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கி வாழ்த்தினார்.



அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் நிரந்தரம் மற்றும் தற்காலிக பணிகளை பாரபட்சமின்றி வழங்குவது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள அரசு சமுதாயநல மையம் உட்பட அரசு மருத்துவமனைகளில் மருத்துவர், பல்மருத்துவர், ஆய்வக நுட்பனர் நிலை2 (லேப் டெக்னீசியன்) மற்றும் மருத்துவ உதவியாளர் பணிக்கான தற்காலிக பணிநியமன ஆணையை 49பேருக்கு ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் வழங்கினார். தற்காலிக பணிநியமன ஆணையை பெற்றவர்களை வாழ்த்தி பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறிப்பிட்டதாவது:-

கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நிரந்தர பணியோ, தற்காலிக பணியோ படித்த இளைஞர்களுக்கு வழங்கப்படாததால் வேலையில்லா திண்டாட்டம் இருந்தது. தற்போது கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்த திராவிட மாடல் ஆட்சி அரசு பணி மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் தற்காலிக பணிகளை ஒரு பைசா செலவின்றி வழங்கி வருகிறது. இதன் மூலம் படித்த இளைஞர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றார். பின்னர் மருத்துவ பணிக்கு செல்லும் நீங்கள் சேவை மணப்பான்மையுடன் பணிபுரிந்து அரசு மருத்துவமனைக் கல்லூரிக்கு வரும் பொதுமக்களிடம் அன்பாக நடந்துகொள்ள வேண்டுமென அமைச்சர் வேண்டுகோள்விடுத்தார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஆ.நாகராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமைல, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், திமுக நிர்வாகிகள் அம்பை ரவி, பாலம்பாண்டி, திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் செழியன், ஆத்தூர் தாசில்தார் வடிவேல் முருகன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவனீதகிருஷ்ணன், அலுவலர் வடிவேல்முருகன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் குமம்பட்டி விவேகானந்தன், சித்தயன்கோட்டை பேரூராட்சிமன்ற தலைவர் போதும் பொன்னு முரளி, பேரூர்கழக செயலாளர் சக்திவேல், ஊராட்சிமன்ற தலைவர்கள் கோனூர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன், செட்டியபட்டி ராஜா, குட்டத்துப்பட்டி வேல்கனி ஹரிசந்திரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் அலி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

# சேலம் இளைஞர் அணி மாநாட்டில் பல்லாயிரவர் பங்கேற்பு!

### கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி! மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, செப். 2-

மதுரை மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் அவை தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பொன்.முத்துராம லிங்கம், கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தை வேலு மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. தீர்மானங்களை விளக்கி மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரை யாற்றினார்.



அதன் விபரம் வருமாறு:-

வருகிற செப்.20 அன்று மதுரைக்கு வருகை தரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் அலை கடலென திரண்டு வரவேற்பு கொடுக்க வேண்டும்.

மனித இனம் உள்ள வரை மறையா புகழ் பெற்ற மாபெரும் தலைவர், நம் இனமான தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள் நடத்துவது, மாவட்ட அணிகளின் சார்பில் தலைமைக் கழக ஆணையின்படி நிகழ்ச்சிகள் நடத்துவது, ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி ஒரு மாபெரும் திருவிழாவைப் போல் நிகழ்ச்சிகள் நடத்தி நம் தலைவரின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.

நம் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற மாபெரும் மக்கள் சக்தியை திரட்ட வேண்டிய முதல் கடமை நம் கழகத்தினருக்கு இருக்கிறது அதனை நிறைவேற்றும் வண்ணமாக நமது இளைஞர் அணியின் போர்படை தளபதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் மாபெரும் இளைஞர் அணி மாநாட்டை நடத்த திட்டமிட்டு அழைப்பு கொடுத்துள்ளார், அவருடைய அழைப்பையும் எண்ணத்தையும் எழுச்சியும் நிறைவேற்றும் வகையில் கூடல் மாநகரான மதுரையிலிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர் அணி பட்டாளத்து சிப்பாய்களுடன் அணிவகுத்து சென்று சேலத்தில் கூடும் இளைஞர் அணி மாநாடு என்னும் பெருங்கடலில் சங்கமிக்க வேண்டும். நம் இந்தியா கூட்டணிக்கு வெற்றி என்பதை நிரூபிக்க இன்றிலிருந்து புறப்பட தயாராக வேண்டும்.

இந்திய திருநாட்டின் பெருமைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் சந்திராயன்3 திட்டத்தை நிறைவேற்றி நிலவின் தென்துருவத்தில் நமது புகழை நிலை நிறுத்திய விஞ்ஞானிகள் மற்றும் வீரமுத்துவேல் உள்ளிட்ட மூன்று தமிழர்களுக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் கழகத்தில் உழைத்து ஓய்வு பெற்ற மூத்த முன்னோடிகளாக உள்ள அறுபது வயது நிரம்பியவர்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பொற்கிழி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பன உள்ளிட்ட தீர்மானங்களை விளக்கி மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராம், கே.தனசெல்வம், மாவட்ட கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், சின்னம்மாள், முருகவேல், மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், ஆர்.கணேசன், பாக்கியநாதன், இளைஞரணி அமைப்பாளர் சௌந்தரராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணி மாறன், ஆர்.ரவீந்திரன், வைகை பரமன், முத்து கணேசன், அபுதாகிர், அருண்குமார், ஆறுமுகம், பொன்.மு.சேதுராம லிங்கம், விஜயலட்சுமி பாண்டியன் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழ, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு அரசிடம் கண்டிப்பாக அனுமதி பெற்றுதான் கட்டிடம் கட்ட வேண்டும்!

# அனுமதி பெறாத கட்டிடங்கள் ‘சீல்’ வைக்கப்படும்!

### வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி எச்சரிக்கை!

சென்னை, செப். 2-

“தமிழ்நாடு அரசிடம் கண்டிப்பாக அனுமதி பெற்று தான் கட்டிடம் கட்ட வேண்டும். முன் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டினால், அந்த கட்டிடங்களுக்கு சீல் வைக்கப்படும்” என்று அமைச்சர் சு.முத்துசாமி கூறினார்.

இதுகுறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கட்டுமான பொறியாளர்கள், நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. ஆலோசனைக் கூட்டத்தில் 44 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. அதில் 18 கோரிக்கைகளை நிறைவேற்ற வாய்ப்பில்லை என தெரிவிக்கப்பட்டது. கட்டிடங்களுக்கு 12 மீட்டர் உயரம் வரை இப்போது அனுமதியுள்ளது.



அதை 13, 14 மீட்டராக உயர்த்த வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். சென்னை மாநகராட்சியில் தொடர் கட்டுமானம் தொடர்பான இடங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாகர்கோவிலில் தொடர் கட்டிட அனுமதி தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசியிருந்தார். நாகர்கோவில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் முழுவதும் பல நகரங்களில் 2019 முதல் பிரச்சினை உள்ளது. அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண தி.மு.க. அரசு முயற்சி செய்து வருகிறது. குறிப்பாக, எந்தெந்த இடத்தில் தொடர் கட்டுமானங்கள் தேவை என்பது குறித்த ஆய்வை உள்ளாட்சி அமைப்புகள், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செய்து வருகிறது.

விரைவில் இது தொடர்பாக அறிவிப்பு வெளியாகும். தமிழ்நாட்டில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 7 சதவீத அளவிலான நிலத்துக்கு மட்டுமே மாஸ்டர் பிளான்கள் உள்ளன. இப்போது இதை 19 சதவீதமாக உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 22 சதவீதமாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 135 மாஸ்டர் பிளான்கள் கொண்டு வர இருக்கிறோம். இப்போது 23 மாஸ்டர் பிளான்கள் முடியும் நிலையில் உள்ளன. கட்டிடம் கட்டும்போது அரசிடம் கண்டிப்பாக அனுமதி பெற்று கட்ட வேண்டும்.

முன் அனுமதி பெறாமல் யாரும் கட்டிடம் கட்ட வேண்டாம். முன் அனுமதி பெறாமல் நிறைவுச் சான்றிதழ் பெறமுடியாது. மேலும் அந்தக் கட்டிடங்களுக்கு சீல் வைக்கப்படும். தமிழ்நாட்டில் 2016-ஆம் ஆண்டுக்கு முன்பு போடப்பட்ட மனை பிரிவுகள் அங்கீகாரம் பெறாமல் இருந்தால் அங்கீகாரம் பெற வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான காலஅவகாசம் முடிந்துவிட்டது. எனவே 2016க்கு முன் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகள் மற்றும் தனி மனைகளை வரைமுறைப்படுத்துவதற்கு 6 மாத கால அவகாசம் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி கூறினார்.

## மெட்ரோ ரயில் சுரங்கம் தோண்டும் பணி!

சென்னை, செப். 2-

சென்னை மெரினா கலங்கரை விளக்கத்தில் அமையவுள்ள மெட்ரோ ரயில் நிலையத்திற்காக சுரங்கம் தோண்டும் பணியை நேற்று மெட்ரோ மேலாண் இயக்குநர் சித்திக், திட்ட இயக்குனர் அர்ச்சுனன் உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர்.

ஃபிளமிங்கோ என பெயர் வைக்கப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம், தனது பணியை நேற்று தொடங்கி கலங்கரை விளக்கம், கச்சேரி சாலை, திருமயிலை, ஆழ்வார்பேட்டை, பாரதிதாசன் மெட்ரோ ரயில் நிலையம் வழியாக சுரங்கம் செய்யப்பட்டு நவம்பர் 2025ல் போட்கிளப் வந்தடையும்.

ஏற்கனவே 2 வழித்தடங்களில் 8 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் மூலம் சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், 4வது வழித்தடத்தில் முதன்முறையாக மெரினாவில் சுரங்கம் தூண்டும் பணி தற்போது தொடங்கியுள்ளது.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது சம்பந்தமாக மற்றும் சேலத்தில் நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டிற்கு திரளான இளைஞரணியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஒச்சு பாலு தலைமையில் நடைபெற்றதில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுச்சாமி, பெ. குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல், அக்ரி கணேசன், சம்மட்டிபுரம், ஆர் கணேசன், பாக்கியநாதன், இளைஞர் அணி சௌந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சியில் ரூபாய்25 லட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம சாவடி கட்டும் பணிக்கான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்த போது எடுத்தபடம். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மேற்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வீரராகவன், துணைதலைவர் கார்த்திக், மாவட்ட கவுன்சிலர் நேருபாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர் பூங்கோதை மலைவீரன், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், கழக நிர்வாகிகள் சசிக்குமார், பூமிநாதன், மருதுபாண்டியன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் - எம். சிவராமன் 44எ, டாக்டர் ராதாகிருஷ்ணன் வீதி, வேலாண்டிபாளையம் அஞ்சல், கோவை 25.

துணைத் தலைவர் - வி. மகாலிங்கம் 253,விளாங்குறிச்சி ரோடு, கோவை4.

அமைப்பாளர் - **எஸ். பூர்ணசந்திரன்** 89, 3வது மாடி கிரே டவுன், காந்திபுரம், கோவை18.

துணை அமைப்பாளர்கள் - சி.பாலகிருஷ்ணன் , 34/35, கே.பி. ஆறுமுகம் தெரு, என்.ஜி.ஆர். காலனி, வரதராஜபுரம், கோவை 15. பி.சக்திவேல் 27/11, மறைமலை அடிகள் நகர், பீளமேடுபுதூர் , பீளமேடு, கோவை 4. எஸ்.தேவசகாயம், 37, பி.பி.சி. காலனி, ஆவரம்பாளையம் , கணபதி, கோவை06. மா.முத்துப்பாண்டி, 23,டி.கே. நாயுடு, பீளமேடுபுதூர், பீளமேடு, கோவை 4. நா.நாகராஜ் 37, கே.சி. தோட்டம், செட்டி வீதி, கோவை 01.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ர.ராஜகோபால் 207,பூங்கா நகர், சிவில் ஏர்போர்ட் போஸ்ட் , கோவை 641014

துணைத் தலைவர் - டி.எஸ்.எஸ்.மூர்த்தி 7/29 டி.எஸ்.எஸ். தோட்டம் கணுவாய், சோமையம்பாளையம் கோவை

அமைப்பாளர் - **எம்.செல்வராஜ்** ராஜா தோட்டம் கருப்பராயன் பாளையம், கோவை

துணை அமைப்பாளர்கள் - குமார் 280வடக்கு ஹவுசிங் யூனிட் செல்வபுரம், கோவை காந்தி 3/326 மீனம்பாளையம் மூடுதுரை, புளியம்பட்டி கோவை செம்மேடு துரைசாமி 1சென்னி ஆண்டாள் வீதி செம்மேடு, கோட்டைக்காடு கோவை ஆர்.ஜி. சரவணகுமார் 5/520, குட்டை தோட்டம், தொப்பம்பட்டி, கோவை. இ.நடராஜ் 666பொம்மனம்பாளையம் குப்பனூர் ஊராட்சி அன்னூர் டி.கே. பழனிசாமி 14/5நாவலர் வீதி, இலுப்பம் பாளையம் சிறுமுகை

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் - கே.எம்.மயில்சாமி 3/16,கோதவாடி அஞ்சல் கிணத்துக்கடவு கோயம்புத்தூர்642 109

துணைத் தலைவர் - எஸ்.கருப்புசாமி (எ) துரை முள்ளுப்பாடி தாமரைக்குளம் அஞ்சல் கிணத்துக்கடவு

அமைப்பாளர் - **ஜெ.பாஸ்கர்** 9/168 ஜெ.பி.ஆர் இல்லம் கக்கன் வீதி வால்பாறை642 127

துணை அமைப்பாளர்கள் - எம்.ரமேஷ் 3/300,உடையா கவுண்டர் தோட்டம் முத்துக்கவுண்டன்புதூர் அஞ்சல் சூலூர்641406 எம்.வீரப்பன் 5/144 பள்ளிக்கூட வீதி பெத்தநாயக்கனூர் அஞ்சல் ஆனைமலை ஒ.என்.மோகன் குமார் 33,பஜனை கோவில் தெரு ஓடையகுளம், ஆனைமலை பொள்ளாச்சி செ.சுப்பிரமணியம் 18/7,பி.ஆர்.கே. நகர் இருகூர், சூலூர் 641103 பி.எ.செந்தில் குமார் 1,சரண்யா கார்டன் அதியமான் வீதி பொள்ளாச்சி 642001

**தஞ்சை மத்திய மாவட்டம்**

தலைவர் - ஆர்.மோகன் வடக்கு தெரு, சீராளூர், தஞ்சை

துணைத் தலைவர் - ஜெ.ராஜராஜன் உப்பரிகை தெரு, மானோஜிப்பட்டி, தஞ்சை

அமைப்பாளர் - **சின்னையன்** தெற்கு தெரு, திருமங்கலக்கோட்டை ஒரத்தநாடு

துணை அமைப்பாளர்கள் - க.சுதாகர் (எ) விஜயகுமார் பெரிய பழங்கொண்டார் தெரு, பொய்யுண்டார்கோட்டை சோ.நந்தகுமார் 1/532 நடுத்தெரு, வடசேரி. டி.சிவக்குமார் நடுத்தெரு, இராய முண்டானபட்டி பூதலூர் ஜி.பி.ரவிச்சந்திரன் வடக்குத்தெரு, மண்டலக்கோட்டை ஒரத்தநாடு கே.தண்டயுபாணி மேலத்தெரு, தெற்கு கோட்டை ஒரத்தநாடு எ.அன்பழகன் ஆதிதிராவிடர் தெரு, திட்டை

**மதுரை மாநகர் மாவட்டம்**

தலைவர் - ப.அண்ணாதுரை 4/48,கல்லூரி வீதி ,தாசில்தார் நகர் மதுரை20

துணைத் தலைவர் - எம்.ஆர்.முத்தையா, 7,வ உசி நகர் மெயின் வீதி, பி பி சாவடி, மதுரை16

அமைப்பாளர் - **காவேரி சொக்கலிங்கம்** பிளாட் எண்.15 மீனாட்சி கார்டன் பிரதான சாலை விசாலாட்சிபுரம் புது நத்தம் ரோடு, மதுரை14

துணை அமைப்பாளர்கள் - கா.முனியசாமி 9/13,சி சி ரோடு ,வெங்கடாசலபுரம் மதுரை11 ச.தனபாலன் 3/2,அப்பாதுரை நகர் மூன்றாவது தெரு,கூடல் நகர் மதுரை18 து.கணேசன் டி29 மீனாட்சி பவனம் பங்கஜம் காலனி 2வது தெரு, மதுரை9 'தி.மலர் ராஜா 12எ சூடாமணி காம்பவுண்டு, வைகை வடகரை ,ஆழ்வார்புரம் மதுரை2 பா.மருதுபாண்டியன் 5/1130 பாண்டியன் நகர் 2 வது தெரு, யாகப்பா நகர் மதுரை வை.பாலகிருஷ்ணன் 567 இந்திராநகர் 1 வது தெரு, பீ.பீ.குளம் மதுரை2 ஆ.பால்பாண்டி 63,பாஸ்கர தாஸ் நகர், திடீர் நகர் ஆறாவது பிளாக் மதுரை1 மா.பால்பாண்டி எ230 வீரமுடையான் 4வது தெரு, பழங்காநத்தம் , மதுரை

**கடலூர் மேற்கு மாவட்டம்**

தலைவர் - பி.அறிவுடைநம்பி, க.எண்.11.என்.என்.கார்டன், ஆப்பிள்தெரு, பெரியார்நகர் தெற்கு, விருத்தலாசம் தாலுகா மற்றும் அஞ்சல், கடலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - எ. சிவக்குமார், எண்.202. மேலத்தெரு, செம்பேரி அஞ்சல் மற்றும் கிராமம், பெண்ணாடம் 606105

அமைப்பாளர் - **பூ.மதியழகன்** கோனூர் கிராமம் மற்றும் அஞ்சல், 153/164. மெயின் ரோடு, திட்டக்குடி தாலுகா, கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - பி.என். பன்னீர் செல்வம், கிழக்கு தெரு, பழனி நகர், எடச்சித்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், வேப்பூர் தாலுகா, கடலூர் மாவட்டம். அன்பழகன் மெயின்ரோடு, முருகன்குடி அஞ்சல் (ம) கிராமம், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். மெக்கானிக் சரவணன், எண்.2/3. ராமன் தெரு, ராமச்சந்திரன் பேட்டை, சேலம் மெயின் ரோடு , விருத்தலாசம் தாலுகா மற்றும் அஞ்சல், கடலூர் மாவட்டம். வி. எழில் செல்வம், கே.எ. பெரிய பகண்டை, பகண்டை அஞ்சல், மற்றும் கிராமம் பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். பெ.கருணாநிதி, 789. புதுகாலணி, தொளாளர் வடக்கு, தாலுக்கா, கடலூர் மாவட்டம். எ.செல்வக்குமார், நெ.114. நடு தெரு , தீவளூர் கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். எம்.ஆர். திருமாறன் 51/23, திருவள்ளுவர் நகர், நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம்.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் - எஸ்.எஸ். முத்து 91/67,லஜபதி நகர், மலையாள மேடு, பேட்டை , திருநெல்வேலி.

துணைத் தலைவர் - டி.முருகன் 21/ஏ, பெரிய மருது பாண்டியர் தெரு, மேலக்கருங்குளம், மேலப்பாளையம் , திருநெல்வேலி.

அமைப்பாளர் - **அந்தோணி ஆர்.செலஸ்டின்** ஷெட்டி 12/4, முதல் தெரு, ராஜேந்திரன் நகர், பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - ம. மந்திரமூர்த்தி 684,6வது குறுக்குத்தெரு, மகாராஜநகர், பாளையங்கோட்டை. வர்கீஸ் அமல்ராஜ் 7,செல்வ விநாயகர் கோவில் தெரு, கொக்கிரகுளம், திருநெல்வேலி. ஆ. கர்ணன் 33,மாரியம்மாள் கோவில் தெரு, காமராஜ்பூரம், கொக்கிரகுளம், திருநெல்வேலி. எஸ். வேல்முருகன் 109, வி.வி.கே. தெரு, பேட்டை , திருநெல்வேலி. சர்வேஸ் மைதீன் 6 ஆர்.பி. மேலத்தெரு, பேட்டை , திருநெல்வேலி.

**சென்னை தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எஸ்.பி.அருள்** 1/78,தர்மராஜா கோவில் தெரு, ஷேக் மானியம், போரூர்,சென்னை - 600 116.

துணை அமைப்பாளர்கள் - இ.சேகர் 11, ஈ.வெ.ரா. பெரியார் தெரு, காயத்ரி நகர், அயப்பாக்கம், சென்னை 600077. ஜெ.வெங்கடேசன் 97, பிள்ளையார் கோயில் தெரு, அயப்பாக்கம், சென்னை 600077. இ.தேவராஜ் 3/8,கங்கையம்மன் கோயில் தெரு, ஓடைமாநகர், வானகரம், சென்னை 600095. எ.செல்வம் 1/106, பெருமாள் கோயில் தெரு, அடையாளம்பட்டு, சென்னை 600095. எஸ்.சரவணன் 25,2வது தெரு,கந்தசாமி நகர், மதுரவாயல், சென்னை - 600 095. ஏ.ராகேஷ் 9,வ.உ. சி. தெரு, பொன்னி நகர், காரம்பாக்கம், சென்னை 600 116. எம்.பாலகிருஷ்ணன் 3/1368, காந்திநகர் 7 வது தெரு, கோவிலம்பாக்கம், சென்னை 600 129. எம்.நாட்டார் 55, த.வீ.வ.வாரியம் காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை 600 126. எஸ்.ஸ்ரீதர் 2/11, அம்மன் கோவில் தெரு, சந்தோஷபுரம், சென்னை 600073. ஏ.ஜெயக்குமார் 8/404, காந்தி தெரு, விஜயநகரம், மேடவாக்கம், சென்னை 600 100. ஜி.மெர்வின் 1/261, காரணை மெயின்ரோடு, அரசன்காலனி, ஒட்டியம்பாக்கம், சென்னை 600130.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் - மாங்குடி எஸ்.கிருஷ்ணமூர்த்தி வடக்கு மாங்குடி காட்டுமன்னார் கோவில் வட்டம் கடலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எஸ்.சி.பாலசுப்ரமணியன் செங்கழிநீர்பள்ளம் திருநாரையூர் அஞ்சல் காட்டுமன்னார் கோவில் வட்டம் கடலூர் மாவட்டம் கே.ஆர்.வெங்கடேசன் கிருஷ்ணபுரம் புவனகிரி வட்டம் கடலூர் மாவட்டம்.

**திருச்சி வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எம்.செல்வராசு 32,வடகள்ளர் தெரு, முசிறி- 621211 திருச்சி மாவட்டம், பி. சங்கர் கணேஷ் 36,கணபதிபாளையம் காட்டுபுத்தூர் அஞ்சல் தொட்டியம் தாலுகா திருச்சி மாவட்டம் எஸ். மணிவாசகம் காந்தி நகர் பாலசமுத்திரம் தொட்டியம் தாலுகா திருச்சி மாவட்டம்

**திருச்சி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - டி. ஆனந்தன் 39,சின்னசாமி நகர் 4வது குறுக்குத்தெரு, தென்னூர் அஞ்சல், திருச்சி17 எஸ். சந்திரசேகர் திருமணமேடு வாளாடி (வழி) இலால்குடி தாலுகா திருச்சி மாவட்டம்

**அரியலூர் மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜெ.மாரிமுத்து, இளமங்கலம் அஞ்சல் செந்துறை வட்டம் அரியலூர் மாவட்டம் டி. எம்.டி. அறிவழகன், கோரியம்பட்டி, இலையூர், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

**சிவகங்கை மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் வே.விஜயகிருஷ்ணன் மேலபூவந்தி, பூவந்தி அஞ்சல் திருப்புவனம் வட்டம் சிவகங்கை ப.பாண்டியன் கள்ளிக்குடி, பெரியகாரை அஞ்சல் தேவகோட்டை வட்டம் சிவகங்கை மாவட்டம் ரா.ரவி தமராக்கி வடக்கு (ம) அஞ்சல் சிவகங்கை வட்டம் சிவகங்கை மாவட்டம் மு.மகேந்திரன் மல்லாகோட்டை அஞ்சல் சிங்கம்புணரி தாலுக்கா சிவகங்கை மாவட்டம்

**விருதுநகர் தெற்கு மாவட்டம்**

தலைவர் - து.ரெகுபதி, 1/89,நடுத்தெரு, கோபாலபுரம் அஞ்சல் 626136

துணைத் தலைவர் - எஸ்.பாலன் 85,பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை626101

அமைப்பாளர் - **செ.சரவணக்குமார்** 1/57,கிழக்குத்தெரு நத்தத்துப்பட்டி சாத்தூர்626202

துணை அமைப்பாளர்கள் - பெ.காட்டுராஜன் 481/3,இலங்கிபட்டி புலியூரான் அஞ்சல்626101 சி.கழுகேசன் 618,நடராஜா தியேட்டர் பின்புறம் மேலக்காந்தி நகர் 626203. வி.செல்வம் 10, அய்யம்பட்டித்தெரு, திருவில்லிபுத்தூர்626125. எ.பரமராஜ் வடக்கு கொப்புசித்தம்பட்டி626113 மு.வரதராஜன் இராமலிங்காபுரம்626004

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - ரா.நாவப்பன் 27,அய்யனார் கோவில் வீதி, ஜி.என். பாளையம் வில்லியனூர் புதுச்சேரி605110

துணைத்தலைவர் - க.மதிவாணன் 15,தெற்கு தெரு, சேதராப்பட்டு,ஊசுடு புதுச்சேரி605111

அமைப்பாளர் - **ப.தவமுருகன்** 48,மேட்டுத்தெரு, குருவிநத்தம் அஞ்சல், பாகூர், புதுச்சேரி607402

துணை அமைப்பாளர்கள் - ப.அமிர்தலிங்கம் 52,குச்சிப்பாளையம் வீதி பாகூர் அஞ்சல் புதுச்சேரி ஆ.சிவப்பிரகாசம் 12,மதிகிருஷ்ணாபுரம் பாகூர், புதுச்சேரி கி.பழனிசாமி 25,2வது மெயின் ரோடு, லட்சுமி நகர்,சாரம் புதுச்சேரி605013 கு.குமார் 35,மெயின்ரோடு,சின்னகரையான்புத்தூர்,நெட்டப்பாக்கம்,புதுச்சேரி சி. ராமதாஸ் 95, மாரியம்மன் கோவில் தெரு, வி. தட்டாஞ்சாவடி, வில்லியனூர், புதுச்சேரி - 605110, ரா.பாலு, 1,அங்காளம்மன் கோவில் தெரு, பனையடிக்குப்பம் புதுச்சேரி605106 து.கோபி 4,ஐயனார் கோவில் வீதி, ஜி.என்.பாளையம், வில்லியனூர் புதுச்சேரி605110 ம.தேவநாதன் 13,புதுத்தெரு,இராமநாதபுரம் தொண்டமாநத்தம், புதுச்சேரி605502 அ.கல்பனா 2,மாரியம்மன் கோவில் தெரு, பாகூர் அஞ்சல், புதுச்சேரி.

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம்**

தலைவர் - ஆ.பழனிச்சாமி ஜோகிபட்டி , ஒட்டன்சத்திரம் வட்டம்

துணைத் தலைவர் - மா.கருப்பையா சிங்காரகோட்டை வடமதுரை வழி, வேடசந்தூர் வட்டம்

அமைப்பாளர் - **பி.சி. தங்கம்** நீலாக்கவுண்டன்பட்டி கள்ளிமந்தயம், ஒட்டன்சத்திரம் வட்டம்

துணை அமைப்பாளர்கள் - ரா.பழனிச்சாமி பழைய அரவை ரோடு பாளையம் அஞ்சல், குஜிலியம்பாறை வட்டம் பொ. முத்துச்சாமி சுக்காம்பட்டி, குட்டம் அஞ்சல் வேடசந்தூர் வட்டம் ப.கனகராஜ் தும்மிச்சம்பட்டிபுதூர் ஒட்டன்சத்திரம் அ. தங்கராஜ் புது அத்திகோம்பை, சாலைபுதூர் அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம் துரை. ராஜா கரிக்காலி, குஜிலியம்பாறை வட்டம் ஆ.பார்த்திபன் வடக்கு தெரு, சாலைபுதூர் ஒட்டன்சத்திரம் வட்டம் சே. அயூப்கான் ரெட்டியபட்டி, வத்திப்பட்டி அஞ்சல் நத்தம் வட்டம் சை.கரிமுல்லா நாகையகோட்டை, கோவிலூர் வழி , வேடசந்தூர் வட்டம். வீ.பன்னீர் செல்வம், கே.ஆண்டிப்பட்டி, கம்பிளியம் பட்டி, சாணார்பட்டி, திண்டுக்கல் வட்டம். பா. சக்திவேல், கரியாம்பட்டி மற்றும் அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம்.

**திண்டுக்கல் மாநகரம்**

தலைவர் - த. ஜெகநாதன் 10/52,ஸ்கீம் ரோடு, ஆர்.வி.நகர், திண்டுக்கல்.

துணைத் தலைவர் - த. முருகசேன் , எம். 134, ஆர். எம்.காலனி , காட்டாஸ்பத்திரி பின்புறம் , திண்டுக்கல்.

அமைப்பாளர் - **சு. பால்ராஜ் ,** 309/84, 8வது தெரு,தெற்கூர் மேட்டுப்பட்டி, எனாமல் பேக்டரி ரோடு பேகம்பூர் அஞ்சல்,திண்டுக்கல்.

துணைஅமைப்பாளர்கள்-ரெ.இராமு,23/2,செல்லாண்டியம்மன் கோவில் தெரு திண்டுக்கல். ப. கண்ணதாசன் , 70பி /3, சாமியார் தோட்டம் , நாகல்நகர், திண்டுக்கல். செ. வீரமணி, 135, ஆர்த்தி தியேட்டர் ரோடு , ஒய். எம். ஆர்.பட்டி, திண்டுக்கல். எம்.கண்ணன் 46,அபிராமி நகர் , சிலுவத்தூர் ரோடு , திண்டுக்கல். எஸ். பி.சுல்தான் , 6/2, முருகன் கோவில் தெரு மேற்கு கோவிந்தபுரம் , திண்டுக்கல்.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - ஒ. மகாராஜன் 2/32, பெரும்பாறை மணலூர்-624212

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் ப. செல்வராஜ் வளையாம்பட்டுமற்றும் அஞ்சல் திருவெண்ணெய் நல்லூர் வட்டம் டி. ராமானுஜம் குளக்கரை வீதி, உலகலம்பூண்டி விக்கிரவாண்டி வட்டம் எம். பரசுராமன் நெ.374,நடுத்தெரு, சிறுவானூர் திருவெண்ணெய் நல்லூர் வட்டம்

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - பி. இராமமூர்த்தி மத்தூர் ஒன்றியம் ஊத்தங்கரை

துணைத் தலைவர் - கோ.வி. செல்வம் எம். வெள்ளபட்டி அஞ்சல் மற்றும் கிராமம் ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - **எம். சத்தியனாராயணமூர்த்தி** நெ.50 தீர்தகிரி வலசை சிங்கராப்பேட்டை ஊத்தங்கரை

துணை அமைப்பாளர்கள் - எம். அசேகான் 3/69,கொண்டப்பநாயணபள்ளி அஞ்சல் மற்றும் கிராமம் பர்கூர் தாலுகா, கிருஷ்ணகிரி பி. வெங்கடாசலம் மங்கலஅள்ளி மகா தேவன கொல்லஅள்ளி போச்சம்பள்ளி கிருஷ்ணகிரி ஜி. சரவணன் சந்தம்பட்டி குள்ளப்பட்டி அஞ்சல் போச்சம்பள்ளி தாலுகா கே. குமரன் காவேரிப்பட்டினம் மேற்கு பி. முனிராஜ் காவேரிபட்டினம் மேற்கு எம். ஜேம்ஸ் ஆலப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல் கிருஷ்ணகிரி வி. சரவணன் 4/188 மோட்டூர் காலனி கிராமம் கனமுட்லு அஞ்சல். கிருஷ்ணகிரி டேம். நாராயணசாமி 3/478 பெரியமுத்தூர் கே ஆர் பி அணை கிருஷ்ணகிரி ஜெ. சீனிவாசன் பனமரத்துப்பட்டி கீழ்குப்பம் அஞ்சல் ஊத்தங்கரை கே.பி. ஆசைதம்பி சாமல்பட்டி அஞ்சல் மத்தூர் தெற்கு ஒன்றியம் ஆர். சுப்பரமணி காவேரிப்பட்டினம் கிழக்கு சி. ஸ்ரீதர் சோபனூர், தட் ர அள்ளி அஞ்சல் கிருஷ்ணகிரி

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஆ.ராஜா எண்.188,முத்தமிழ் வீதி திருவேங்கடாபுரம் பொன்னேரி 601204

துணைத் தலைவர் - ஜி.கணேசன் ஒதப்பை கிராமம் மற்றும் அஞ்சல் ஊத்துக்கோட்டை வட்டம்

அமைப்பாளர் - **டி.மணி** எண்.2/38 எல்.ஆர்.மேடு கிராமம் ஆரம்பாக்கம் அஞ்சல் கும்முடிப்பூண்டி வட்டம் 601201

துணை அமைப்பாளர்கள் - சா.தியாகராஜன் எண்.1/67 மண்ணடி தெரு,எளாவூர் கிராமம் கும்முடிப்பூண்டி வட்டம் 601201 எ. யுகேந்திரன் எண்.461,சூரவாரி கண்டிகை கிராமம் சிறுபுழல்பேட்டை அஞ்சல் கும்முடிப்பூண்டி வட்டம் 601201 பு.சுதாகர் இந்திராகாந்தி தெரு, ஞாயிறு கிராமம் மற்றும் அஞ்சல் சென்னை 600 067 பி.கே. நாராயணசாமி எண்.18,ராமர் கோவில் தெரு, பாகல்மேடு, வெங்கல் அஞ்சல் ஊத்துக்கோட்டை வட்டம் பி.எஸ்.இரமேஷ் எண்.223 பெருமாள் கோவில் தெரு, பனையஞ்சேரி,ஊத்துக்கோட்டை எல். உதயகுமார் என்.14 கோமிட்டி பேட்டை ஆரணி 601101 ஆர். பார்த்தசாரதி கொண்டமாநல்லூர் கிராமம் ஏடூர் அஞ்சல், கும்முடிப்பூண்டி - 601201. கே. அரி 184, பெருமாள் கோவில் தெரு, திருவெள்ளவாயல் - 601203. ஜெ. பாலச்சந்தர் 82, எம்.ஜி.ஆர். தெரு, தடம் பெரும்பாக்கம், பொன்னேரி - 601204. எம். சுப்பிரமணி ஜனப்பசத்திரம், அழிஞ்சிவாக்கம், சென்னை - 600067.

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர் - டி.விசேஸ்வரன் அம்பேத்கர் காலனி செம்மங்குடி609104

துணைத் தலைவர் - கே.மகேந்திரன் தோப்புதெரு,மேக்கிரி மங்கலம், பழைய கூடலூர், குத்தாலம் தாலுகா

அமைப்பாளர் - **இரா.மனோகரன்** அக்ரஹாரம், திருமணஞ்சேரி அஞ்சல் குத்தாலம் தாலுகா மயிலாடுதுறை

துணை அமைப்பாளர்கள் - ஆர்.செல்வமுத்துகுமார் 4B,நங்கநலத்தெரு, திட்டை ரோடு, தென்பாதி, சீர்காழி எ.மோகன் 5/66,வள்ளலார் வீதி, மங்கநல்லூர், குத்தாலம் தாலுகா மயிலாடுதுறை பா.குலோத்துங்கன்9/169எ,மேலசாலை,காரைமேடு, சீர்காழி சூ.முத்துகருப்பன் ஆளப்பள்ளம் ஊராட்சி நல்லூர் அஞ்சல், சீர்காழி தாலுகா கே.சந்துரு தெற்கு மேட்டுத் தெரு எருக்கட்டாஞ்சேரி அஞ்சல், தரங்கம்பாடி தாலுகா பொன்.ராஜா 4/19,மேலவேளித்தெரு,மேலையூர், பூம்புகார் இரா.செந்தில் 6/50,மேலத்தெரு திருக்கடையூர், தரங்கம்பாடி தாலுகா ஆ. பிரேம்குமார் 2/85,கீழத்தெரு, திருச்சிற்றம்பலம் மயிலாடுதுறை609204 கோவி.உமாபதி மன்மதன் கோவில் தெரு,காளி போஸ்ட் மயிலாடுதுறை தாலுகா609811 எ.இளையராஜா 41எ,தெற்கு தெரு,பனமங்கலம் சீர்காழி, மயிலாடுதுறை ந.கனகராஜ் 1/101, பிள்ளையார் கோவில் தெரு, மேலையூர், தரங்கம்பாடி, மயிலாடுதுறை.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - க. அருண் தவசுபாண்டியன் 7/109, சின்ன சங்கரன் கோவில் ரோடு சிவந்திபுரம், அம்பாசமுத்திரம் வட்டம்.

துணைத் தலைவர் - மா.சுடலைமுத்து, ஊராட்சி மன்றதலைவர் 4/79B, தேவர் தெரு, செங்குளம், பாளை தாலுகா

அமைப்பாளர் - **மு.ராஜ சங்கரலிங்கம்** எஸ்2, தாமிரபரணி அப்பார்ட்மெண்ட் மனோ தெரு, என்.ஜி.ஓ. "ஏ " காலனி 627007

துணை அமைப்பாளர்கள் - சி.ஐயப்பன் 88, முடுக்கு தெரு, சேரன்மகாதேவி. பெ. வெங்கடேசன் 28ஏ 1,1ஏ, செங்குளம் காலனி, கோபாலசமுத்திரம். ' ஆச்சியூர் எம்.ராமசாமி 14ஏ,மேலத்தெரு, வடக்கு ஆச்சியூர் தளபதிசமுத்திரம் அஞ்சல் 627101 ந.சண்முகவேல் 23,சங்கரன் கோவில்ரோடு , அம்பாசமுத்திரம். சு.சிதம்பரம் 386, வடக்குதெரு, வாகைகுளம். எஸ்.பூதப்பாண்டியன் அயன்சிங்கம்பட்டி, அம்பாசமுத்திரம் தாலுக்கா. க. குமரகுரு 42/86, பெருமாள் கோவில் தெரு, வள்ளியூர் சு. கருப்பசாமி பாண்டியன் 165, கீழக்காடுவெட்டி, வடக்கு அப்பர்குளம் களக்காடு ஒன்றியம். ஆர்.தனகிருபா 278எ. பனிசகுளம் கண்ணநல்லூர் 627109 பி.முத்துகுமார் 18/1, வடக்கு தெரு, வடக்கு குமிளம்பாடு627109 சு.ஆறுமுகம் தெற்கு தெரு, தெற்கு பாப்பான்குளம் வீ.மணி 7/29,அரியகுளம் பாளையங்கோட்டை

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - வே.செண்டு 11/53, இந்திரா நகர், காட்டாம்புளி, பாலாமடை , மானூர் போஸ்ட்.

துணைத் தலைவர் - சு. சப்பாணி இரயில்வே பீடர் ரோடு, நடுக்கல்லூர் 627010

அமைப்பாளர் - **ப. கருப்பசாமி** 267, போலீஸ் காலனி, சாந்தி நகர் பாளையங்கோட்டை627002.

துணை அமைப்பாளர்கள் - என்.கோபால் ராமானுஜம் 8/12, மெயின்ரோடு, நடுக்கல்லூர், திருநெல்வேலி 627010. மா.ஷாஜகான் சங்கரங்கோவில் மெயின் ரோடு , மானூர், திருநெல்வேலி எஸ். நயினார் 15/5, பிள்ளையார் கோவில் தெரு, பாலாமடை போஸ்ட் 627 359 என். துரை பாண்டியன் 1/2, கீழத்தெரு, எஸ்.குப்புனாபுரம் , மானூர் ஒன்றியம். எஸ். பழனி 122, பிள்ளையார் கோவில் தெரு , குப்பக்குறிச்சி , சீவலப்பேரி போஸ்ட் திருநெல்வேலி. வே. வெயிலப்பன் சுத்தமல்லி, திருநெல்வேலி.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஏ.பி.ஆர்.ராஜாங்கம் 3/309 அத்திப்பள்ளம் ,விராலிமலை புதுக்கோட்டை மாவட்டம்

துணைத் தலைவர் - ம.தரணிரமேசு 27,உசிலங்குளம் 2ஆம் தெரு, புதுக்கோட்டை மாவட்டம்

அமைப்பாளர் - **சி.அரங்கநாயகம்** 5697,சாந்தநாதபுரம் புதுக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - து.கண்ணன் பாலண்டாம்பட்டி ,குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் சி.ஜெயராமன் சத்தியமங்கலம் ,அன்னவாசல் புதுக்கோட்டை மாவட்டம் எம். ஆறுமுகம் 60,பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் புதுக்கோட்டை மாவட்டம் செ.விஜயகுமார் பொன்னம்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் சிவ.சண்முகம் 227,சித்தாம்பூர், நீர்பழனி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்622515 ப.வெங்கடேசன் புதுக்கோட்டை விடுதி, காடாம்பட்டி அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம் கே.தங்கராசு சித்தன்னவாசல், இலுப்பூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் ஆர். ராஜாங்கம் திருமணஞ்சேரி,கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் சு.இளையராஜா செங்களூர் ,குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்

**தூத்துக்குடி மாநகரம்**

தலைவர் - என்.மாரிமுத்து 5/87,எம்.தங்கம்மாள்புரம் முத்தையாபுரம், தூத்துக்குடி5

துணைத் தலைவர் - பா.பாண்டியராஜன் 170,அழகேசபுரம் முதல் தெரு, தூத்துக்குடி

அமைப்பாளர் - **எஸ்.முத்துவேல்** 2/518,வடக்கு தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி628005

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பாஸ்கரன் 63B/1,கந்தசாமிபுரம் தூத்துக்குடி ஆர்.ரவீந்திரன் 281/39எ,திரேஷ்புரம் தூத்துக்குடி628001 எஸ்.அங்குசாமி 102/20,குறிஞ்சி நகர் 7வது தெரு, தூத்துக்குடி2 கு.பாலமுருகன் 5/137,அய்யப்பநகர் 3வது தெரு, தூத்துக்குடி பெ. மாரியப்பன் 63பி,கிருஷ்ணராஜபுரம் தூத்துக்குடி

**நாகப்பட்டினம் மாவட்டம்**

தலைவர் - வே.கோவிந்தசாமி நடுக்காடு, தகட்டூர் வேதாரண்யம் தாலுக்கா

துணைத் தலைவர் - கோ.சிவக்குமார் 1/108,புளியந்தோப்புத்தெரு கங்களாஞ்சேரி அஞ்சல், நாகப்பட்டினம் தாலுக்கா

அமைப்பாளர் - **ஆர்.துரைராஜ்** மணிவான்குத்தகை ஆயக்காரன்புலம்3, வேதாரண்யம் தாலுக்கா

துணை அமைப்பாளர்கள் - ஜி.எல்.அம்பிகாபதி வடக்காலத்தூர் பட்டமங்கலம் (PO) கீழ்வேளூர் தாலுக்கா சோ.மோகன் 4.எ, பிராந்தியங்கரை வேதாரண்யம் தாலுக்கா நாகப்பட்டினம். எஸ். வெங்கடாசலம் மகாராஜபுரம், மேல்பாதி துளசாபுரம் அஞ்சல் வேதாரண்யம் கி.பாபு (எ) சிவதாஸ் பெருமைக்கோன்காடு பஞ்சநதிக்குளம் வேதாரண்யம் க.இளஞ்செழியன் 34/40, வாணியத்தெரு திட்டச்சேரி அஞ்சல், நாகப்பட்டினம் தாலுக்கா எஸ்.ஏ. பாலசுப்பிரமணியன் 455, வலியான் செட்டிக்கட்டளை, மருதூர் வடக்கு வேதாரண்யம் தாலுக்கா கே.செந்தில்குமார் பசுக்கிடைவேளி தெற்கு பணையூர் 119 அனக்குடி வலிவலம் அஞ்சல், திருக்குவளை தாலுக்கா வி.எஸ். பரமசிவம் 2/463, உதயராசபுரம் வாய்மேடு மேற்கு வாய்மேடு அஞ்சல் வேதாரண்யம் தாலுக்கா

லோகநாதன் நெ.2/448,மேல நாட்டிருப்பு தெற்கு பனையூர் ஊராட்சி கீழ்வேளூர் ஒன்றியம் நாகை ராஜேந்திரன் நெ.4/39,சிவன் தெற்கு தெரு, சிக்கவலம், புலியூர், நாகை.

**இராணிப்பேட்டை மாவட்டம்**

தலைவர் - சி.ஜி.சண்முகம் சித்தேறி கிராமம் மற்றும் அஞ்சல், நெமிலி வட்டம்

துணைத் தலைவர் - எ.ஜி.ராஜா எண்.862, பள்ளத்தெரு, வளயாத்தூர் எ டி சி வளையாத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், கலவை வட்டம்.

அமைப்பாளர் - **ராமலிங்கம்** நெ.41எ,ஈஸ்வரன் கோவில் தெரு, மேல்பாக்கம் கிராமம், அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை

துணை அமைப்பாளர்கள் - சிவக்குமார் கோவிந்தராஜ் நெ.5/125 சாமுண்டீஸ்வரி கோவில் தெரு, இச்சிபுதூர் கிராமம் மற்றும் அஞ்சல் அரக்கோணம் ப.பழனி முள்வாய் ஆனைப்பாக்கம் அஞ்சல் அரக்கோணம் (கி) ஒன்றியம், டி.ஜி.தண்டபாணி எண்.59,வேளாளர் தெரு,பனப்பாக்கம் நெமிலி வட்டம் இராணிப்பேட்டை தினகரன் ஐயப்பன் பேட்டை சேரி நெமிலி வட்டம் இராணிப்பேட்டை. கே. பன்னீர் செல்வம் நெ.125 ஒத்தவாடை தெரு,பெரிய தகரகுப்பம் செங்காடு அஞ்சல் வாலாஜா பி.தணிகைவேல் நெ.1/48,மேட்டுத்தெரு, கே.வேலூர் கிராமம் மற்றும் அஞ்சல் (வழி) கலவை, ஆற்காடு வட்டம் 632506

**தருமபுரி கிழக்கு மாவட்டம்.**

துணை அமைப்பாளர் - எ. சரவணன் வெள்ளக்கால், டொக்கு போதனஅள்ளி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 31-08-2023

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி



செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் மரகதப் பூங்காவில், ஒளிரும் பூங்கா அமைக்கும் பணியினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று (1.9.2023) தொடங்கி வைத்து, அமைக்கப்பட உள்ள ஒளிரும் பூங்கா குறித்த காட்சி விளக்க குறும்படத்தை பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப்நந்தூரி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனிஅல்லிநகரம் நகராட்சி சார்பாக சாலையோர வியாபாரிகளுக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் சாலையோர விற்பனை செய்வதற்கு வண்டி வழங்கினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. நகரமன்றத் தலைவர் ரேணு பிரியா பாலமுருகன், துணை தலைவர் செல்வம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டியன், கவுன்சிலர்கள் நகர துணைச் செயலாளர் நாகராஜன், மாவட்டப் பிரதிநிதி பண்ணை ரவி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் நாகமணி, இளைஞர் அணி அரவிந்த், தினேஷ்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மும்பையில் ‘I.N.D.I.A.’ கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன்
# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!



















# உடன்பிறப்பே... 21

## சி.நா.மீ. உபயதுல்லா:

# தஞ்சை தீரர்!

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சி.நா.மீ. உபயதுல்லா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




தஞ்சாவூர் நகரம் கலைகளை வளர்த்த நகரம் மட்டுமல்ல, கழகத்தை வளர்த்த நகரமும் கூட. ஆம், கழகத்தின் கொடி முதன்முதலில் ஏற்றப்பட்ட நகரங்களில், கலைஞர் போராட்டக் களம் கண்ட நகரங்களில் தஞ்சைக்கு எனத் தனி இடம் உண்டு. காவிரிக் கரைகளில் பொங்கும் புதுப்புனல் போல கழகமும், தஞ்சையும் இணைபிரியா வரலாறு கொண்டவை.

அங்கு இலக்கியமும் செழுமையானது. மரபு, நவீனம் என படைப்புலகில் கொடி நாட்டியவர் பலர். நகரத்தின் ஏதாவது ஓர் இடத்தில் தினமும் இலக்கியக் கூட்டம் நடக்கும். அங்கு தவறாமல் இருப்பார் கழகத்தின் நகரச் செயலாளர்.

இலக்கியவாதிகளுக்கு எல்லாம் அவர்தான் புரவலர். சிறப்புப் பெயரிட்டு அவரை ‘இலக்கியக் காவலர்’ என்பார்கள். ஆனால் அவர், இலக்கியக் காவலர் மட்டுமல்ல, எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கத்துக்குத் தஞ்சையின் கழகக் காவலர். அந்தத் தளகர்த்தரின் பெயர் சி.நா.மீ.உபயதுல்லா.

### கலைஞரின் கண் அசைவில்...

1962-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த இரண்டாவது பொதுத்தேர்தலில் தஞ்சாவூரில் போட்டியிட்டார் கலைஞர். அவரை எதிர்த்து நின்றவர் மிகப்பெரிய செல்வந்தர். செல்வாக்குமிக்க காங்கிரஸ் காரர். கலைஞர் வெற்றிபெறுவது கடினம் என அன்றைக்கு ஆரூடம் சொன்னார்கள். ஆனால், ஆரூடங்களைத் தவிடுபொடி யாக்கி 38 வயதில் இரண்டாவது முறையாக சட்டமன்றம் சென்றார், கலைஞர்.

தேர்தல் களத்தில் கலைஞருக்காக அணியில் பிள்ளையாக ஓடிக் கொண்டிருந்தார் 21 வயது அந்த இளைஞர். அதன்மூலம் கலைஞரின் நன்மதிப்பைப் பெற்ற அந்த இளைஞர்தான் ‘இலக்கியக் காவலர்’ என பின்னாட்களில் பெயரெடுத்தார். கலைஞரின் தஞ்சைப் பயணங்களில் ‘கலைஞரின் காவலர்’ எனப் பெயர் பெற்றார்.

### தத்தெடுத்துக் கொண்ட தஞ்சை!

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அபிராமம் என்கிற ஊரில் 1941-ஆம் ஆண்டு பிறந்தவர் உபயதுல்லா. தொழில் நிமித்தம் தஞ்சை வந்தவர்கள் அவரின் பெற்றோர். ஜவுளித் தொழில், பேன்சி பொருட்கள் கடையும் நடத்தி வந்தனர். அந்தத் தொடர்புகளில் கழகத்தில் தொடர்பும் சேர்ந்துகொள்ள, தஞ்சைத் தெருக்களில் கழகக் கொடிபிடிக்கத் தொடங்கினார் .

திருவாரூரில் பிறந்தாலும் கலைஞரின் அரசியல் களம் தஞ்சையை மையம் கொண்டது எனலாம். 1951-ஆம் ஆண்டு, தஞ்சையில் ராஜாஜிக்குக் கருப்புக் கொடி காட்டும் போராட்டம் உட்பட, பல போராட்டங்களின் தஞ்சாவூர் தளபதி கலைஞர்தான். தஞ்சையில் கலைஞரின் குரலையும், கொள்கையையும், தமிழையும் கேட்ட இளைஞர்கள் துடிப்பேறி நின்றனர். அப்படித்தான் 1962-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் கலைஞரின் அணிலாக நின்றார் உபயதுல்லா. கழகத் தலைவரான பின்னும் கலைஞர் அந்த இளைஞனை மறந்துவிடவில்லை.

**1962-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் கலைஞரின் அணிலாக நின்றார் உபயதுல்லா. கழகத் தலைவரான பின்னும் கலைஞர் அந்த இளைஞனை மறந்துவிடவில்லை.**

### கழக வாழ்க்கை கலக வாழ்க்கை

கழகத்தின் போராட்டங்கள், சிறைகள், களப்பணிகள் எல்லாம் தலைவர்களுக்கு மட்டுமல்ல, அடிமட்டத் தொண்டர்களும் குண்டாந்தடி சந்தித்த நினைவுகள் கொண்டவர்களே! அந்த வரிசையில் தஞ்சாவூரில் துடிப்புமிக்க உபயதுல்லாவும் சந்தித்த துயர்கள் ஏராளம்.

சிறுபான்மைச் சமூகத்தில் இருந்து கழகக் கொடி பிடித்தவர் என்பதால், சொந்தங்களுக்குள் புறக்கணிப்புகளும் ஏராளம். இப்படியாக சமரசமற்ற கொள்கைக்காரரான உபயதுல்லாவுக்கு நகரச் செயலாளர் என்கிற இருக்கையை 1987-ஆம் ஆண்டு அளித்தார் கலைஞர். தஞ்சாவூர் நகரத்தில் கழகத்தின் ஏற்றத்துக்கும் இறக்கத்துக்கும் ஏறப 27 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் 2014-ஆம் ஆண்டு வரை திறம்பட நின்றவர். தஞ்சாவூர் கழகத்தின் கோட்டையானதற்கு, உபயதுல்லா சிந்திய வியர்வைத் துளிகளும் பங்கு கொள்ளும்.

### நம்பிக்கை நாயகர்

1989- ஆம் ஆண்டில் தஞ்சாவூர் தொகுதியில் உபயதுல்லாவுக்கு வாய்ப்பு வழங்கினார் கலைஞர். முதல் வெற்றியைப் பதிவு செய்து கலைஞரின் நம்பிக்கையைக் காப்பாற்றினார்.

இரண்டாவது முறையாக 1991- ஆம் ஆண்டில் மீண்டும் தஞ்சை தொகுதிக்கு உபயதுல்லா பெயரை ‘டிக்’ செய்தார் கலைஞர். அது அவருக்குத் தெரியாது, ஆனால், கலைஞரைச் சந்திக்கையில், “தலைவரே... எனக்குச் சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என்றாலும் பரவாயில்லை; தஞ்சாவூர் நகரச் செயலாளர் என்ற கட்சிப் பொறுப்பை மட்டும் தொடர அனுமதியுங்கள்; நீங்கள் நிறுத்தும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்கிறேன்!” என்றார்.

“போய்த் தேர்தல் வேலைகளை ஆரம்பியுங்கள்; நீங்கள்தான் வேட்பாளர்!”என்று சொல்லி அனுப்பினார் தலைவர். இப்படி நெருக்கமான தளகர்த்தராக, தொண்டனாகத் திகழ்ந்தவர் உபயதுல்லா.

தொடர்ச்சியாக, 1996, 2001, 2006-ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிகளைக் குவித்தவர். அதற்காக 2006-2011 கழக ஆட்சியின்போது வணிக வரித்துறை அமைச்சராக்கி தஞ்சாவூர் வாக்காளர்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தார் கலைஞர்.

### தமிழ்ப் பணி

தமிழ் ஆர்வலர் என்பதும், உபயதுல்லாவின் அடையாளம். அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் தமிழார்வம் தழையும். திருக்குறள் மேற்கோள் இல்லாமல் அவரது உரை நிறைவுறாது. அவரது கழகப்பணியும், தமிழ்ப்பணியும் அறிவார் கலைஞர். அதனால்தான் 2020- ஆம் ஆண்டில் கலைஞர் விருதும், 2023- ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா விருதும் அவருக்கு வந்து சேர்ந்தன.

கலைஞரின் டெல்டா மாவட்டச் சுற்றுப்பயணங்கள் தஞ்சாவூரில் இருந்துதான் தொடங்கும். அவர் வந்து இறங்கும் ‘உழவன் எக்ஸ்பிரஸ்’ ரயில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் நுழைந்தால், அந்த அதிகாலையில் ரயிலடியே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். உபயதுல்லாவின் வரவேற்புடன் கலைஞரின் பயணம் தொடங்கும். கூடவே, கலைஞரின் காவலராக உபயதுல்லாவும் உடன் செல்வது கழகத்தினர் கண்ட காட்சிகள்.

### பெரியார் பேச்சும் கலைஞர் வீச்சும்

1962 இல் தஞ்சாவூரில் போட்டியிட்ட கலைஞரைத் தோற்கடிக்க வேண்டும் எனப் பெரியார் வந்து பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். அந்தப் பேச்சினை ஒரு ஓரமாக இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார் கலைஞர். தனது பேச்சின் தொடக்கத்தில், முதல் 10 நிமிடங்கள் கலைஞரின் பெருமைகளைப் புகழ்ந்து பேசிவிட்டு, அதன் பின்னர் “அப்படி இருந்தவர்கள் மாறிவிட்டனர். அவர்களை ஆதரிக்க வேண்டாம்” என நீண்ட நேரம் பேசி இருக்கிறார்.

அவர் பேச்சை முடிப்பதற்குள், அவர் கையில் கலைஞர் குறித்து, அவர் முதலில் பேசிய பேச்சுகள் கொண்ட துண்டறிக்கை கொடுக்கப்பட்டது. அதில் ‘பெரியார் பாராட்டிய கலைஞர்’ என அன்றைய தேதியுடன் அச்சடிக்கப்பட்டிருந்தது. ஒரு மணி நேரத்துக்குள் அந்தப் பிரச்சாரத் துண்டறிக்கையைப் பார்த்த பெரியார், ‘கலைஞரை ஜெயிப்பது கடினம்’ எனச் சொல்லிவிட்டுச் சென்றார். கடைசியில், அதுதான் நடந்தது. கலைஞர் நினைத்த வேகத்துக்கு, அந்த வேலையைச் செய்து முடித்த தம்பிகளில் ஒருவர் உபயதுல்லா.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி அவர் மறைந்தபோது, திருவாரூர் மாவட்டப் பயணத்துக்குச் சென்ற நமது முதலமைச்சர், **‘உபயதுல்லா இல்லம்’** சென்று தனது துயரத்தினைப் பகிர்ந்து கொண்டார். அவர் இல்லாத தஞ்சை நகரத்தை எப்போதும் கழகக் கோட்டையாக வைத்திருப்பதே அவருக்குக் காட்டும் அன்பு என்பதைச் சொல்லாமல் சொல்லிச் சென்றார். அதைத் தஞ்சைக் கழகம் அறியும்.

**...துடிக்கும்**

## இந்தியாவுக்கான பாடம்!

ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) சமீபத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை குறித்துப் ‘பிரிக்ஸ்’ நாடுகளுக்கிடையில் நிலவும் வேறுபாடுகளை இவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

இந்தியாவில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக 74 சதவிகிதம் பேர் சத்தான உணவை நுகர முடிவதில்லை என்றும், அதனால் ‘பிரிக்ஸ்’ நாடுகள் பட்டியலில் இந்தியா கடைசி இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவிட் தொற்றுக்குப் பிறகு இந்தப் போக்கு மேலும் அதிகரித்திருப்பதாக இவ்வறிக்கை கூறுகிறது.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சியில் பெரும் தேக்கம் நிகழ்கிறது. ஊட்டச்சத்துக் குறைபாடின்றி வளரும் குழந்தைகள் அறிவாற்றல் நிறைந்தவர்களாக வளர்கிறார்கள் என்று சுகாதாரத் துறை ஆய்வுகள் கூறுகின்றன. ‘திராவிட மாடல்’ அரசு முன்னெடுக்கும் காலை உணவுத் திட்டம் இந்தியாவுக்கு வழிகாட்டும் என்று சொல்வது வெறும்பேச்சாக நின்றுவிடப் போவதில்லை. இந்தியா முழுக்க இத்திட்டம் தேவைப்படுகிறது என்பதைத்தான் ‘பிரிக்ஸ்’ அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

## ::ப்ளாஷ்பேக்



### நாணயமும் பாராட்டும்!

1981-ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உள்ள சொக்கம்பட்டி என்கிற எங்கள் சிறிய கிராமத்தில் கழகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்துக்குச் சிறப்புரையாற்ற கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போதெல்லாம் கழகப் பொதுக்கூட்டங்களில் தலைவருக்கு எடைக்கு எடை நாணயம் வழங்குவது வழக்கம். அதனால், எங்கள் ஊர் நிகழ்ச்சியிலும் தலைவருக்கு எடைக்கு எடை நாணயம் வழங்கப்பட்டது. சிறிய கிராமமாக இருந்தாலும், எங்களது அந்த முயற்சியை தலைவர் மேடையிலேயே பாராட்டினார். அப்போது ‘முரசொலி’ ஏஜென்ட் என்ற முறையில் அதற்கு எனது பங்களிப்பைச் செலுத்தினேன். அந்நாளில் கலைஞருக்கு ரூ.6,700/- வழங்கினோம். என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி.


சங்கரலிங்கம்

**-ஆர்.சங்கரலிங்கம்,**
**பள்ளி ஆசிரியர் (ஓய்வு), சொக்கம்பட்டி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்துக்குக் கட்டுப்படுதல்!

**1969-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை கலைஞர் ஏற்றதும் கழகத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டபோது, பெரியார் அதைச் சரிசெய்ய முயன்றார். பிப்ரவரி 15-ஆம் தேதி ‘விடுதலை’யில் அது தொடர்பாக எழுதுகையில், பவுத்த ஸ்தான முறையுடன் ஒப்பிட்டுக் கழகக் கட்டுப்பாட்டினை வலியுறுத்தினார். “1. தலைவனுக்குக் கீழ்ப்படிதல், 2. கொள்கைகளுக்குக் கீழ்ப்படிதல் 3. ஸ்தாபனத்தைக் கவுரவப்படுத்துதல். இம்மூன்றும் முறைப்படி இல்லாதவர் ஸ்தாபனத்துக்குக் கட்டுப்பட்டவரல்ல என்பதுதான் பொருள்” என எழுதினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 228




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.